PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்


13.01.2016 - மலர் 12, இதழ் 46



## இனிய பொங்கல் வாழ்த்துக்கள்



## கண்ணீர் எவ்வாறு சுரக்கின்றது...?



PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

வரலாற்று சிறப்புமிக்க

## உஸ்ஸன்கொட தேசிய பூங்கா

## ஊர்வன உலகின் மிகக் கொடியவை...



விலை ரூபா 15/-


மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இங்கு வழங்கப்பட்டுள்ள நிறங்களின் பெயர்களை அவற்றுடன் பொருந்தும் ஏதேனுமொரு மலருடன் இணைக்க.

2. கீழ்வரும் நிறங்களின் ஆங்கிலப் பெயர்களுக் கான தமிழ்ப் பெயர் களைக் குறிப்பிடுக.

green - ....................
orange - ....................
white - ....................
pink - ....................
blue - ....................
yellow - ....................
red - ....................




3. படத்தில் காணப்படும் பூச்சியினங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

..............................................................

ராமுவும் கீதாவும் எண் பாதை வழியே ஓடி விளையாடிக்கொண்டிருந்தனர். ராமு எப்போதும் பின்னடைவினையே சந்தித்தான். கீதா பெறுமதி கூடிய எண்கள் வரை ஓடிச் சென்று அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்டாள்.

1. ராமு கால் வைத்திருக்கும் எண் யாது?

..............................................

2. போட்டியில் முன்னிலை வகித்து அதிக புள்ளிகளைப் பெற்றிருப்பவர் யார்?

1. கீதா 2. ராமு 3. இருவரும்



3. இங்கிருக்கும் எண்களில் ஆகக் கூடிய பெறுமதியுடைய எண்ணும் ஆகக் குறைந்த பெறுமதியுடைய எண்ணும் முறையே;

1. 21, 2 2. 1, 22 3. 22, 1

4. 'எண்' என்பதன் ஆங்கிலப் பதம் யாது?

..............................................




பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுக.



I see the ______________ deer / door

I see the ______________ fog / frog

I see the ______________ grate / gate

I see the ______________ hat / ham

I see the ______________ plate / pail



1. படத்தில் காணப்படுவனவற்றில் தரை வழியாக போக்குவரத்தில் ஈடுபடுத்தக்கூடியவை எவை?

..............................................................

2. தரை, வான், கடல் போன்ற போக்குவரத்து வழிமுறைகளில் படத்தில் காட்டப்படாத போக்குவரத்து வழிமுறை யாது?

..............................................................

3. இங்கு காணப்படும் தரை வழிப் போக்குவரத்து சாதனங்களில், பயணிப்பதற்கு பிரத்தியேகப் பாதை தேவைப்படும் போக்குவரத்து சாதனம் எது?

..............................................................

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இவ்வாண்டில் உலக வெப்பநிலை மேலும் அதிகரிக்கும்...!


உலக வெப்பநிலையானது, கடந்த ஆண்டில் இருந்ததை விட, பிறந்துள்ள 2016 ஆம் ஆண்டில் மேலும் 1⁰ செல்சியஸ்ஸினால் அதிகரிக்கக்கூடும் என பிரித்தானிய காலநிலை அலுவலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. உலக வெப்பமடைதலைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமை மற்றும் எல்-நினோ காலநிலை தாக்கம் என்பனவற்றினாலேயே உலக வெப்பநிலை இவ்வாறு அதிகரித்துச் செல்வதாக அந்த அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையில் பிரான்ஸ் தலைநகர் பெரிஸில் காலநிலை மாநாடு நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட நாடுகள், பூமியின் வெப்பநிலை $1.50^0$ செல்சியஸ்ஸை விட அதிகரித்துச் செல்ல எவ்விதத்திலும் இடமளிப்பதில்லை என்ற இணக்கப்பாட்டிற்கு வந்தன. எனினும், $1^0$ செல்சியஸ் அளவு வெப்பநிலை அதிகரிப்புக்கூட இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட போதுமானதாகும் என சில விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.




இந்நிலையில், பிரித்தானியாவின் Daily Mail பத்திரிகையில் வெளியாகியுள்ள ஓர் அறிக்கையில், அதிகரித்துச் செல்லும் உலக வெப்பநிலை காரணமாக, உலகின் பல்வேறு பகுதிகளில் சூழல் மாற்றமடையலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து விளக்கமளிக்கும் விஞ்ஞானிகள், இவ்வாறு சூழல் மாற்றமடைந்து சென்றால், இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரிக்கும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். தற்போதளவில் அத்தகைய இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய பிரதேசங்கள் பல கண்டறியப்பட்டுள்ளதாகவும், அந்த அனர்த்தங்கள் எப்போது, எவ்விடத்தில் ஏற்படும் என்பது குறித்து உறுதியாக கூறமுடியாதிருப்பதாகவும் விஞ்ஞானிகள் மேலும் கூறியுள்ளனர். எனவே, உலக வெப்பநிலை அதிகரிப்பதனைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (-அ)

> **இவ்வாறு சூழல் மாற்றமடைந்து சென்றால், இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரிக்கும்**




உலக வெப்பநிலை அதிகரிப்பினைக் காட்டும் வரைபடம்.

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

ශ්‍රී ලංකා මහජන උපයෝගිතා කොමිෂන් සභාව
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
Public Utilities Commission of Sri Lanka


இ.பொ.ப.ஆ வின் அனுசரணையில்
அன்பளிப்பாக வழங்கப்படும் பலவர்ண
கால அட்டவணை அடுத்த வாரம்
விஜய் பத்திரிகையுடன் ..




உங்கள் பிரதிகளை இன்றே
பதிவு செய்து கொள்ளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழகுங்கள் நல்லவர்களுடன்



ஒரு கிராமத்தில் இராமர் என்னும் கடை உரிமையாளர் வாழ்ந்து வந்தார். அவர் கிராமத்தையே தன் குடும்பமாக எண்ணி அன்பு காட்டுவார். கடனுக்குப் பொருள் கேட்டால் கொடுத்துவிடுவார். மதிய நேரத்தில் சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் புறப்படுவார். அந்த நேரம் யாராவது பொருள் கேட்டு வந்தால் காத்திருக்க நேரிடுமே என்பதால் கடையை அடைக்க மாட்டார். அறிமுகமே இல்லாத நபராக இருந்தால்கூட கடையைச் சற்று நேரம் பார்த்துக் கொள்ள சொல்லிவிட்டு வீட்டிற்குப் போய் விடுவார்.

ஒருநாள் மதியம் திருடன் ஒருவன் கடைக்கு முன் வந்தான். அவனிடம் இராமர் ‘‘ஒரு உதவி செய்ய வேண்டும். சிறிது நேரம் கடையைப் பார்த்துக்கொண்டால் வீட்டிற்குப் போய் சாப்பிட்டுவிட்டு வந்துவிடுவேன்’’ என்று கூறினார். மகிழ்ச்சியுடன் சம்மதித்தான் திருடன். இதனால், இராமரும் மகிழ்வுடன் சாப்பிடக் கிளம்பிவிட்டார். அந்த நேரத்தில் வந்த சிலரிடம் காசை வாங்கிக்கொண்டு பொருட்களைக் கொடுத்தான் திருடன். பணப்பெட்டியும் திறந்தே இருந்தது. அந்த நேரத்தில் திருடனின் நண்பன் ஒருவன் அங்கே வந்தான்.

‘‘நண்பா, திருடுவதற்கு இதைவிட சரியான சந்தர்ப்பம் நமக்கு கிடைக்காது. பணம், பொருட்களை எடுத்துக் கொண்டு ஓடிவிடலாம்’’ என்று யோசனை கூறினான். திருடனுக்கோ தயக்கம். தனக்குள் ஏன் இந்த மாற்றம் என்றே அவனுக்குப் புரியவில்லை. சிறிது நேரம் சிந்தித்தவன் ‘‘தன்னை நம்பிய கடைக்காரருக்குத் துரோகம் செய்ய மனமில்லை’’ என்று கூறி தன் நண்பனிடம் திருடுவதற்கு மறுத்துவிட்டான். சிறிது நேரத்தில் இராமர் வந்துவிட்டார்.


அவரிடம் ‘‘எல்லாப் பொருளும் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ளுங்கள்’’ என்றான் திருடன். இராமரோ ‘‘ஏன் இப்படிக் கேட்கிறாய்? உன்மீது கொண்ட நம்பிக்கையால்தான் கடையை ஒப்படைத்துச் சென்றேன். அதனால், பணத்தையோ, பொருளையோ சரி பார்க்கத் தேவையில்லை’’ என்றார்.

இராமரின் நம்பிக்கை மிக்க பேச்சைக் கேட்டதும் திருடனின் வருத்தம் அதிகரித்தது. அப்போது திருடன் ‘‘உங்களைப் போன்ற நல்லவர்களுடன் ஒருநாள் பழகியதற்கே மனம் இவ்வளவு தூய்மையாகி விட்டது என்றால் வாழ்நாளெல்லாம் உங்களோடு உறவாடினால் பிறவிப்பயனே கிடைத்து விடும்’’ என்றான். ‘‘நீங்கள் சொல்வது புரியவில்லையே’’ என்றார் கடைக்காரர். ‘‘ஐயா என்னை மன்னியுங்கள். நான் ஒரு திருடன், என் நண்பனும் நானும் இக் கடையில் திருடும் எண்ணத்துடன்தான் வந்தோம். ஆனால், நல்ல வேளையாக என் இயல்பான திருட்டுக் குணம் இன்று மறைந்து விட்டது. இனி ஒரு நாளும் நான் திருடமாட்டேன் என்றான்.

# கிணற்றுக்குள் பொக்கிஷம்

தெனாலிராமன் வீட்டுத் தோட்டத்தில் பெரிய கிணறு ஒன்று இருந்தது. ஒரு நாள் தோட்டத்தில் செடி, கொடிகள் நீர் இன்றி வாடத் தொடங்கின. அதைப் பார்த்த தெனாலிராமன் வேலைக்காரர்களும் குடும்பத்தாரும் தோட்டத்தைக் கவனிக்கவில்லை என மனம் வருந்தினார். அன்றிரவில் வீட்டருகில் இரு திருடர்கள் இருந்ததைக் கவனித்தார். அவர்களின் நோக்கத்தைப் புரிந்துகொண்ட ராமன் சத்தமிட்டபடி தன் மனைவியை எழுப்பினார்.

அவளிடம் ஒரு இரும்புப்பெட்டியைக் காட்டி ‘‘ஊருக்குள் திருட்டுப் பயம் அதிகமாகிவிட்டது. நகைகளையெல்லாம் இந்தப் பெட்டிக்குள் பத்திரமாக வைத்திருக்கிறேன். இதை இப்போதே நம் வீட்டுத் தோட்டத்துக் கிணற்றுக்குள் பாதுகாப்பாகப் போட்டுவிடுவோம் தேவையானபோது எடுத்துக்கொள்ளலாம்’’ என்றான். இதனால், தெனாலிராமனும் மனைவியும் பெட்டியைத் தூக்கி வந்து கிணற்றுக்குள் போட்டனர்.



இதனை அவதானித்த திருடர்கள் பெட்டியை எடுப்பதற்காக கிணற்றுக்குள் இறங்கி நீரை இறைத்து வெளியேற்றினர். மறைந்திருந்த ராமனும் அவரது மனைவியும் அவர்களுக்குத் தெரியாமல் ஆளுக்கொரு மண் வெட்டியால் நீரை தோட்டத்திற்கு பாய்ச்சினர். ஒரு வழியாக கிணற்றில் பெட்டியை எடுத்த திருடர்கள் அதில் கற்கள் மட்டுமே இருந்ததைக் கண்டு ஏமாந்து போயினர். அப்போது, தெனாலி திருடர்களைப் பார்த்து ‘‘நன்றி நீங்கள் வந்த வேலை முடிந்துவிட்டது. தோட்டத்திற்கு முழுமையாகத் தண்ணீர் பாய்ந்துவிட்டது’’ என்றார். சத்தம் கேட்ட திருடர்கள் அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர்.

# தீவுக்கு அரசன்

ஒரு நாட்டில் வித்தியாசமான வழக்கம் ஒன்று இருந்தது. பரம்பரையாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர் அங்கு மன்னராக இருக்க முடியாது. குடிமக்களில் யார் வேண்டுமானாலும் மன்னராகலாம். ஆனால், பதவிக்காலம் ஓராண்டு மட்டும்தான். ஓராண்டு கழிந்ததும் கடைசி நாளில் அரண்மனைக் காவலர்கள் மன்னரை ஒரு படகில் ஏற்றிச் சென்று ஆளே இல்லாத தீவில் விட்டுவிடுவார்கள். கடைசி நாளில் கண்ணீருடன் தீவுக்குச் செல்வதும் வழக்கமாகிப் போனது.



அந்த ஆண்டு இளைஞன் ஒருவன் நாட்டின் மன்னரானான். அவன் பதவியேற்ற நாள் தொடக்கம் மலர்ந்த முகத்துடன் மகிழ்ச்சியாக இருந்தான். மக்களுக்குப் பயனுள்ள திட்டங்களை செயல்படுத்தினான். எதிரி நாட்டினர் படையெடுத்து வந்தபோது திறமையுடன் போராடி நாட்டைக் காப்பாற்றினான். அந்த இளைஞனின் பதவிக்காலம் முடியும் நேரமும் வந்தது. வழக்கம்போல் மன்னரை அழைத்துச் செல்ல படைத்தளபதி காவலர்களுடன் வந்தார். மன்னரை தீவுக்குக் கொண்டு செல்லப்போகிறோமே என்ற கவலை தளபதிக்குக்கூட இருந்தது. ஆனால், மன்னர் சற்றும் வருந்தவில்லை. படகில் தீவுக்கு செல்லும்போது தளபதி ‘‘மன்னா, தீவில் நீங்கள் மட்டும்தான் தனியாக இருக்க வேண்டும். அதை சிறிதும் உணராமல் எப்படி சந்தோஷப்பட்டுக்கொண்டு இருக்கிறீர்கள்?’’ என்று கேட்டார்.

‘‘விதியை மாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு, நான் மன்னரானதும் செய்த முதல் பணியே ஆளில்லாத அந்த தீவை சிரமைத்து மக்கள் வாழும் அளவுக்கு வசதிகளைச் செய்ய என் நம்பிக்கைக்குரிய நபர்களை ரகசியமாக தீவுக்கு அனுப்பியதுதான். அவர்கள் காட்டை அழித்து நாடாக மாற்றியுள்ளனர். எனக்கான அரண்மனையும் இப்போது அங்கு தயாராக உள்ளது. அவர்கள் என் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள்’’ என்றார் மன்னர்.

இதைக்கேட்ட தளபதி ஆச்சரியம் கொண்டார். அங்கு ஆளில்லாத தீவு அழகான நாடாக காட்சியளித்தது. மன்னரை பணியாட்கள் மாலை அணிவித்து வரவேற்றனர். தளபதிக்கும் உடன் வந்தவர்களுக்கும் தீவில் மன்னர் விருந்தளித்து மகிழ்வித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் பயில்வோம் IELTS

**IELTS** என்ற கற்றல் முறையானது, இன்று பலரது கவனத்தையும் ஈர்த்துள்ள ஒன்றாகும். குறிப்பாக உ/தர பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற இந்த IELTS தேர்வு முறை பற்றிய சில விபரங்களைப் பார்ப்போம்.

அனைத்துலக ஆங்கில மொழிக்கான தேர்வு முறையே (International English Language Testing System) என்ற IELTS ஆகும். இது ஒருவருக்கு உள்ள ஆங்கில மொழி அறிவை சோதிப்பதற்கான சர்வதேச அளவில் தர நிலைப் படுத்தப்பட்ட தேர்வு முறையாகும். இந்த தேர்வு முறையின் பெறுபேறுகள் இரண்டு ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும்.

பேச்சுப் பயிற்சியே IELTS இல் ஒரு முக்கியமான பங்கு வகிக்கின்றது. பரீட்சார்த்தி நடுவர் ஒருவருடன் நேருக்கு நேராகக் கலந்து கொள்ளும் ஒரு நேர்முகத் தேர்வு பரீட்சை நடைபெறும். இவ்விருவரின் உரையாடலை ஒலிப்பதிவு செய்த பின்னர் அவ் ஒலிப்பதிவினை தேர்வு குழுவினர் செவிமடுத்து மதிப்பெண்களை வழங்குகிறார்கள்.







IELTS என்னும் இவ் ஆங்கில மொழி பாடநெறியில் கிரகித்தல், வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல் ஆகிய திறன்களை கண்டறிவதற்கான சோதனைகள் நடத்தப்படும்.

**ஒருவருக்கு உள்ள ஆங்கில மொழி அறிவை சோதிப்பதற்கான சர்வதேச அளவில் தர நிலைப்படுத்தப்பட்ட தேர்வு முறை**

இப் பரீட்சையின் மொத்தக் கால நேரம் சுமார் 2 மணி 45 நிமிடங்களாகும்.

- செவிமடுத்தல் (Listening) - 40 நிமிடங்கள், இதில் 30 நிமிடங்களுக்கு ஒலிப்பதிவொன்று ஒலிபரப்பப்படும், அதனை நன்கு செவிமடுத்து அதையொட்டி தரப்பட்ட வினாத்தாளில் பதில்களை எழுதுவதற்குக் கூடுதலாக 10 நிமிடங்கள் தரப்படும்.
- வாசித்தல் - 60 நிமிடங்கள்
- எழுதுதல் - 60 நிமிடங்கள்

என மேற்படி பரீட்சை நேரங்கள் வகுக்கப்பட்டிருக்கும்.

IELTS கற்கை நெறியானது சர்வதேச பல்கலைக்கழகத்தில் மேல் படிப்புக்கும் வெளிநாடுகளில் தொழில் புரிவதற்கும் பெரிதும் உதவுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மின்சார அனர்த்தங்களை தவிர்ப்போம்

**வீட்டில், சுற்றுப்புறத்தில், பாடசாலையில் ஆகிய இடங்களில் மின்சார அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பாக நீங்கள் அறிவீர்களா? இவற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்வது தொடர்பான சுவரொட்டியொன்றை வடிவமைத்து பணப்பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வெல்லுங்கள்.**

## நாடளாவிய சுவரொட்டி (போஸ்டர்) போட்டி...!



வீட்டில், சுற்றுப்புறத்தில் அல்லது பாடசாலையில் ஏற்படக்கூடிய மின்சார அனர்த்தங்கள் தொடர்பாக நீங்கள் அறிவீர்களா? மின்சார அனர்த்தங்களிலிருந்து தற்காத்துக்கொள்வதற்கு நாம் அனைவரும் தெளிவை பெறல் வேண்டும். அத்துடன் அவற்றை தவிர்ப்பதற்கு, அவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதும் நம் அனைவரதும் கடமையாகும்.



**இப்போட்டியில் தரம்: 6, 7, 8, 9, 10-11 என 5 பிரிவுகளின் கீழ் வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர்.**

### சகல பிரிவுகளிலும் வெற்றி பெறுவோரில்...

முதலாவது இடத்திற்கு - ரூ 20,000
இரண்டாவது இடத்திற்கு - ரூ 15,000
மூன்றாவது இடத்திற்கு - ரூ 10,000

நான்காவது இடம் தொடக்கம் பத்தாவது இடம்வரை பெறுவோருக்கு பெறுமதியான பரிசில்கள். ஒவ்வொரு பிரிவிலும் தலா சிறந்த 200 சித்திரங்கள் வீதம் என 05 பிரிவிலும் மொத்தமாக தெரிவாகும் 1000 சித்திரங்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

### சித்திரத் தலைப்பு

மின்சார அனர்த்தத்தை பிரதிபலிக்கச் செய்கின்ற அல்லது அதிலிருந்து பாதுகாப்பைப் பெறுவது தொடர்பாக எடுத்துக்காட்டுகின்ற எந்தவொரு கருத்தையும் உங்கள் படைப்பிற்கு தலைப்பாகக் கொள்ள முடியும்.

### போட்டி விதிமுறை/ நிபந்தனைகள்

- தலைப்பின் கீழ் ஒருவர் ஆகக்கூடியது 03 படைப்புகளை மாத்திரமே அனுப்ப முடியும்.
- போட்டிக்கு அனுப்பப்படும் அனைத்து சுவரொட்டிகள் (போஸ்டர்கள்) 18--14 அங்குலம் அளவுடையதாக இருத்தல் வேண்டும்.
- பெண்டல் அல்லது நீர்ச்சாயம் போன்ற கையில் ஒட்டிக் கொள்ளாத எந்தவொரு நிறப் பூச்சையும் பயன்படுத்த முடியும்.

சித்திரத்தின் பின்புறம் போட்டியாளரின் பெயர், பாடசாலை, பாடசாலை முகவரி, வகுப்பு, பிறந்த திகதி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், மாவட்டம் மற்றும் மாகாணம், கையொப்பம் ஆகியன போன்ற விபரங்கள் அடங்கலாக பாடசாலை அதிபரின் அல்லது பிரிவுத் தலைவர் அல்லது வகுப்பு பொறுப்பாசிரியரின் உறுதிப்படுத்தல் அடங்கலாக கீழ்காணப்படும் முகவரிக்கு தபாலிட வேண்டும். அல்லது நேரில் வந்து கையளிக்கவும் முடியும்.

(தயவு செய்து உங்கள் விரபங்களை தெளிவாக எழுதுங்கள். ஆங்கிலத்திலும் எழுதினால் நல்லது)

**போட்டி நடுவர் குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.**

**போட்டி முடிவுத் திகதி: 29.02.2016**
**பரிசளிப்பு தினம்: மே மாதத்தில்...**

சித்திரங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
மின்சார அனர்த்த பாதுகாப்பு.
'விஜய்'
த.பெ.இல - 2037
கொழும்பு


மேலதிக விபரங்களுக்கு
எஸ்.கிருஷானந்த் - 0779900344

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்வ
# உலகின்
# மிகக் கொ






| | |
|---|---|
| நாடு | இந்தோனேஷியா |
| உணவு | மான், பன்றி, மாடு, ஓணான் |
| ஆயுட்காலம் | 30 வருடங்கள் வரை |
| நிறை | 70 கிலோ கிராம் |
| வேகம் | மணிக்கு 20 கிலோ மீற்றர் |

## கொமொடோ ட்ரகன் (Varanus komodoensis)

இது உலகில் வாழும் மிகவும் ஆபத்தான ஓணான் வகையாகும். தனக்கு எதிரே வரும் எந்தவொரு மிருகமாயினும் அதனை தாக்குவதற்கு இவை பின்நிற்பதில்லை. இரையைப் பிடிப்பதற்காக தனது நீண்ட கூர்மையான நகங்களையும் பற்களையும் பயன்படுத்திக்கொள்கின்றன. இதன் உமிழ்நீரில் பல்வேறு வகையான பற்றீரியாக்கள் காணப்படுவதால் இவை தாக்கிய இரை படிப்படியாக பலவீனமான நிலைக்குச் செல்லும்.

| | |
|---|---|
| நாடு | அமெரிக்கா |
| உணவு | மீன்கள், பறவைகள், தவளைகள் |
| ஆயுட்காலம் | 80 வருடங்கள் முதல் 120 வருடங்கள் |
| நிறை | 100 கிலோ கிராம் |






## அலிகேட்டர் ஸ்நெப்பிங் டர்டல் (Macrochelys temminckil)

உலகில் வேறு எந்தவொரு கடல் ஆமைக்கும் இல்லாத வித்தியாச மானதொரு வாய் இதற்கு அமைந்துள்ளது. ஒருமுறை சப்பும்பொழுது எலும்புகளும் முறியும். இதனால்தான் இவை மிகவும் கொடிய விலங்காக கருதப்படுகின்றது.

## மொன்ஸ்டர் (Heloderma suspectum)






அதிக விஷம் நிறைந்த ஓணான் இனமாகும். பெரும்பாலான நேரம் மண்ணுக்கடியில் இவை வாழும். உணவாக பறவைகள், தவளைகள், முலையூட்டிகள், ஏனைய ஓணான் வகைகள் மற்றும் வேறு பூச்சி வகைகளையும் உட்கொள்ளும். அதிக மோப்ப சக்தி கொண்டது. இரைகளைப் பிடிப்பதற்காக இரைகளின் விசேட மணத்தை இனங்காணும். இந்த விலங்கு இரையை தனது உமிழ்நீரினால் தாக்கும்.



| | |
|---|---|
| நாடு | ஐக்கிய அமெரிக்கா |
| உணவு | முலையூட்டிகள், பறவைகள், பூச்சிகள் |
| ஆயுட்காலம் | 20 முதல் 30 வருடங்கள் |
| நிறை | 1.8 கிலோ கிராம் |
| நீளம் | இரண்டு அடி |






## அமெரிக்க முதலை (Alligator mississippiensis)

விலங்குகளிலேயே பலமாக மோதித் தாக்கும் திறன்கொண்ட விலங்காகும். இந்த விலங்கு தனது இரையை நோக்கி சத்தம் இல்லாமல் நெருங்கிச் சென்று சரியாக கழுத்துப் பகுதியை திடீரெனத் தாக்கும். இதனை மேற்கொள்வதற்கு அதன் வாயில் உள்ள 80 இற்கும் மேற்பட்ட கூரிய பற்கள் உதவுகின்றன. இரையை இழுத்துச் சென்று நீருக்கடியில் கொண்டு சென்று மூழ்கடித்துக் கொல்லும்.

| | |
|---|---|
| நாடு | அமெரிக்கா |
| உணவு | மீன்கள், ஓணான், முலையூட்டிகள் |
| ஆயுட்காலம் | 30 முதல் 50 வருடங்கள் |
| நிறை | 454 கிலோ கிராம் |
| நீளம் | 15 அடி |






| | |
|---|---|
| நாடு | அவுஸ்திரேலியா |
| உணவு | முலையூட்டிகள், |
| ஆயுட்காலம் | 10 வருடங்கள் முதல் |
| நிறை | 14 கிலோ கிராம் |

## தரைவாழ் டைபான் (Oxyuranus microlepidotus)

அவுஸ்திரேலியாவின் உலர் வலயத்தில் சிறிய அளவில் வாழும் இந்த தரைவாழ் டைபான் பாம்பினமானது, அதிக விஷமுள்ள பாம்பு இனமாகும். மெல்லிய உடலமைப்பைக் கொண்ட இந்த பாம்பு குறுகிய நேரத்தில் வேகமாக பல தடவைகள் தீண்டும் தன்மை கொண்டது. பல்வேறு நிலப்பிரதேசங்களுக்கு ஏற்றவகையில் தனது உடலின் நிறத்தை மாற்றும் திறன் கொண்டது.

## உலகின் 09 கொடிய விலங்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன

டியவை

உலகில் வாழும் விலங்குகள் சாதுவானவையே. எனினும், அவை தமது தேவைக்காக இன்னொரு உயிரினத்தைப் பிடித்து உண்ணுதல் அல்லது தீண்டுதல் நடைபெறுகின்றது. எனவே, அத்தகைய உலகில் மிகக் கொடிய ஊர்வன சிலவற்றை இங்கு நோக்குவோம்.

## கிழக்குக் கபிலப் பாம்பு (Pseudonaja textilis)

இந்த பாம்பினால் தீண்டப்பட்ட விலங்குகளோ, மனிதர்களோ சில மணிநேரம் மாத்திரமே உயிர் வாழ முடியும். தனது தோலின் நிறத்தை மாற்றும் திறன்கொண்டது. இதனால், சரியாக அடையாளம் காண முடியாத காரணத்தாலேயே பெரும்பாலும் இவை தீண்டுகின்றன.



| | |
|---|---|
| நாடு | அவுஸ்திரேலியா, நியூகினி, இந்தோனேஷியா |
| உணவு | எலிகள், பறவைகள், ஈருடகவாழிகள் |
| ஆயுட்காலம் | ஏறக்குறைய 07 வருடங்கள் |

## இராஜநாகம் (Ophiophagus hannah)

இராஜநாகம் ஒன்று ஒருமுறை தீண்டினால் அது வெளியிடும் விஷத்தின் அளவு ஆறு மில்லி லீற்றராகும். அது மிகப் பெரிய யானை ஒன்றினையே கொல்லப் போதுமானதாகும். இராஜநாகத்தின் தாக்குதலின் வேகம் மற்றெல்லாவித பாம்புகளின் தாக்குதல் வேகத்தைவிட அதிகமாகும்.



இராஜநாகத்திற்கு தான் இருக்கும் இடத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் நிகழும் அசைவுகளையும் பார்க்க முடியும். எனினும், சிறியவைகளை காணும் திறன் மிகவும் குறைவு.






இராஜநாகத்தின் மண்டை ஓட்டின் எலும்புகள் அசையும். அதேபோல் இராஜநாகத்திற்கு அதன் எலும்புகள் அமைந்துள்ள இடத்தை மாற்ற முடியும். இதன் மூலம் தன்னைவிட பெரிய இரையை இதனால் விழுங்க முடியும்.

| | |
|---|---|
| நாடு | இந்திய உபகண்டம், தென் கிழக்கு ஆசிய நாடுகள் |
| உணவு | ஓணான், எலிகள், வேறு பாம்பு வகைகள் |
| ஆயுட்காலம் | 20 வருடங்கள் |
| நிறை | 09 கிலோ கிராம் |

## இராஜநாகம் தீண்டும்போது ஏற்படும் பாதிப்புகள்

இதன் தாக்குதலால் மனித உடலின் பல்வேறு இடங்களில் பாதிப்புக்கள் ஏற்படும். இதனால், மரணம் நிகழ்வதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.



- **மூளை:** தலைசுற்றுதல், தாகம், தலைவலி ஏற்பட்டு ஈற்றில் மயக்க நிலையை அடையும்.
- **பார்வை:** பார்வை குறைவடையும்.
- **நுரையீரல்:** சுவாசிப்பதற்கு பெரும் சிரமம் ஏற்படும்.
- **இதயம்:** மிக மோசமான பாதிப்பை எதிர்கொள்ளும் இரத்த அழுத்தம் ஏற்படும்.
- **வயிறு:** வயிற்றோட்டம் போன்ற நோய்கள் ஏற்படும்.
- **தோல்:** அதிக வியர்வையுடன் சொறியும் ஏற்படும்.
- **தசை:** தசைகள் இறுக்கமடையும்.

## ப்ளெக் மம்பா (Dendroaspis polylepis)

ஒரு விநாடியில் 5.6 மீற்றர் வேகத்தில் செல்லும் இந்தவகை பாம்பினமே உலகில் வேகமான பாம்பினமாகும். ஆபத்து என உணர்ந்தவுடனேயே அங்கிருந்து மின்னல் வேகத்தில் விலகிச் செல்லும். இதன் விஷத்தின் திணிவு குறைவாக இருப்பதால் மிகவும் இலகுவாக உயிர் திசுக்கள் வழியாக விஷம் விரைவாகப் பயணிக்கும். இருபது நிமிடத்தில் பாம்பின் இரை செயல் இழக்கும்.



| | |
|---|---|
| நாடு | ஆபிரிக்கா |
| உணவு | முலையூட்டிகள், பறவைகள், எலிகள் |
| ஆயுட்காலம் | 10 முதல் 15 வருடங்கள் |
| நிறை | 1.6 கிலோ கிராம் |




ஆபிரிக்காவில் அதிக மரணத்தை விளைவிக்கும் பாம்பினமாக இந்த 'ப்ளெக் மம்பா' பாம்பு திகழ்கின்றது. சுமார் 4 மீற்றர் நீளம் கொண்டது.

## நைல் முதலை (Crocodylus niloticus)

ஆபிரிக்கா கண்டத்தின் கிழக்கே எதியோப்பியா முதல் மேற்கு கரையில் அமைந்துள்ள செனகல் வரையிலான வலயங்கள் முழுவதிலும் இந்த விலங்கினை காணமுடியும்.நீருக்கு வெளியிலும் இரையை வேட்டையாடும் ஆற்றல் இவைக்கு உள்ளது. 1940-60 வரையிலான காலப்பகுதியில் இந்த விலங்கு முற்றாக அழிந்துபோகும் அபாயத்தை எதிர்நோக்கும் அளவிற்கு வேட்டையாடப்பட்டன.

| | |
|---|---|
| நாடு | ஆபிரிக்கா |
| உணவு | மீனவகைகள், பறவைகள், முலையூட்டிகள் |
| ஆயுட்காலம் | 35 ஆண்டுகள் முதல் 45 ஆண்டுகள் வரை |
| நிறை | 225 கிலோ கிராம் |



வால் மூலமும் தாக்குதல் நடத்த இதனால் முடியும்.

உச்ச நீளம் 6 மீற்றர்
உச்ச நிறை - 730 கிலோ கிராம்.

r
றவைகள்
15 வருடங்கள்

## பஃப் எடர் விரியன் (Bitis arietans)

அதிக விஷமுள்ள விரியன் விஷத்திற்கு கலங்களை அழிக்கும் ஆற்றல் உள்ளது. ஒரு தீண்டுதலிலேயே 750 மில்லிகிராம் அளவு விஷத்தை வெளியேற்றக்கூடியது. இதில் 100 மில்லிகிராம் அளவு விஷமே ஒரு மனிதனை கொல்வதற்கு போதுமானதாகும்.

| | |
|---|---|
| நாடு | ஆபிரிக்க உப சஹாரா வலயம் |
| உணவு | முலையூட்டிகள், பறவைகள், ஈருடக வாழிகள் |
| ஆயுட்காலம் | 10 முதல் 15 வருடங்கள் |
| நிறை | 06 கிலோ கிராம் |





சில வேளைகளில் விஷத்தைக் கக்காவிட்டாலும் உயிர்ச் சேதம் ஏற்படலாம்.



**யானைகள்** இவைகளினால் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் வருடமொன்றிற்கு 600 பேர் உயிரிழக்கின்றனர்.



**காட்டெருமை** ஆபிரிக்காவில் வாழும் இந்த காட்டெருமைகளால் ஒவ்வொரு வருடமும் 500 பேர் அளவில் மரணிக்கின்றனர்.



**சிங்கங்கள்** இவைகளால் வருடந்தோறும் 600 பேர் வரையில் இறக்கின்றனர்.



**நீர் யானைகள்** இவைகளால் ஒவ்வொரு வருடமும் 200 பேர் அளவில் மரணிக்கின்றனர்.



**சுறாக்கள்** இவைகளின் தாக்குதலால வருடத்தோறும் 150 இற்கும் அதிகமானோர் உயிரிழக்கின்றனர்.

- இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-I)

பெயர்: ..........................................................................

கீழ் காணும் எல்லா வினாக்களுக்கும் சரியான விடையின்கீழ் கீறிடுக.

★ *1ஆம், 2ஆம் வினாக்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்கு சமமான சொற்களைக் கொண்ட கூட்டத்தைத் தெரிவுசெய்க.*

01. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

1. மனம், முறுவல் 2. உள்ளம், வதனம்
3. உடல், உள்ளம்

02. கண்ணன் வறியவன் ஆனாலும் புத்திக்கூர்மை மிக்கவன்.

1. ஏழை, படிப்பு 2, ஏழை, அறிவு
3. ஏழை, ஆற்றல்

03. 'நித்தம் நித்தம்' என்பதன் கருத்து;

1. தினமும் 2. ஒவ்வொரு காலமும்
3. நித்திரையில்லாமல்

04. யானை-கன்று எனின்; நெல்....;

1. பயிர் 2. நாற்று 3. கன்று

05. 1 தொடக்கம் 20 வரையுள்ள எண்ணும் எண்களில் இலக்கம் ஒன்று எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

1. 8 2. 12 3. 10

06. ஒரு வரிசையில் 14 தூண்கள் உள்ளன. அடுத்து வரும் இரு தூண்களுக்கிடையில் உள்ள தூரம் 10m ஆகும். முதலாவது தூணுக்கும் கடைசித் தூணுக்கும் இடையிலான தூரம் எத்தனை மீற்றர்?

1. 130m 2. 140m 3. 120m

07. ஒரு மைதானத்தின் நீளம் 150m ஆகும். அதன் அகலம் நீளத்தின் அரைவாசி எனின், அந்த மைதானத்தின் சுற்றளவு எத்தனை மீற்றர்?

1. 600m 2. 450m 3. 400m

08 பின்வரும் வருடங்களில் லீப் வருடம் அல்லாத வருடம் யாது?

1. 2012 2. 2016 3. 2030

09. வடக்குத் திசை காட்டப்படும் குறியீடு யாதாயிருக்கும்?

1. ↑ 2. → 3. ↓

10. ஒரு பீப்பாவில் 42 லீற்றர் நீர் இருந்தது. அதிலிருந்து 15 லீற்றர் 500 மி. லீற்றர் நீர் அகற்றப்பட்ட பின்னர், மிகுதியாக இருந்த நீரின் அளவு யாது?

1. 2 லீற்றர் 500 மி.லீற்றர் 2. 25 லீற்றர் 500 மி.லீற்றர்
3. 24 லீற்றர் 500 மி.லீற்றர்

11. சதுரமுகியில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?

1. 4 2. 5 3. 6

12. $\frac{2}{3} - \frac{2}{6} = \frac{\square}{6}$ கட்டத்தினுள் வர வேண்டிய எண் யாது?

1. 2 2. 4 3. 6




13. $\frac{4}{12}$ இன் சமவலுப் பின்னம் யாது?

1. $\frac{4}{6}$ 2. $\frac{2}{4}$ 3. $\frac{1}{3}$

14. 6368 - ☐ = 4713 கட்டத்தினுள் வர வேண்டிய எண் யாது?

1. 2453 2. 1655 3. 4455

15. ஒரு வட்டத்தின் விட்டம் 3cm எனின், அதன் ஆரை யாது?

1. 6cm 2. 1.5cm 3. 3cm

16. கூம்பு ஒன்றிற்கு உள்ள உச்சிகளின் எண்ணிக்கை யாது?

1. 1 2. 4 3. 3

17. பின்வருவனவற்றுள் முதன்மை எண் யாது?

1. 4 2. 2 3. 6

18. வியாபாரியொருவர் தான் வைத்திருந்த தேங்காய்களின் $\frac{1}{3}$ பங்கை விற்றுவிட்டார் எனின், அவரிடம் இருந்த மிகுதி தேங்காய்களின் பின்ன வடிவம் யாது?

1. $\frac{1}{3}$ 2. $\frac{0}{3}$ 3. $\frac{2}{3}$

19. முதலாவது முக்கோணி எண் யாது?

1. 3 2. 6 3. 10

20. இலக்கம் 100 ஆனது;

1. இரட்டை எண் 2. பத்தின் மடங்கு
3. மேற்கூறிய இரண்டும்

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

### முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி -II)

(ஜனவரி 06 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

*01)* *01. பச்சைப் பசேலென்று*
*02. பூத்துக் குலுங்கும் அழகிய மலர்கள், பச்சைப் பசேலெனக் காட்சி தரும் வயல்வெளிகள்*
*03. கிளிக்குஞ்சை* *04. கிளி+குஞ்சு* *05. அழகிய கிராமம்*

*02)* *01. நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள்?* *02. நான் புத்தகம் வாசிக்கிறேன்.*

*03)* *01.* I am sorry *02.* Please sit

*04)* *01. 2* *05. 1* *08. 1*
*02. 3* *06. 3* *09. 3*
*03. 3* *07. 3* *10. 3*
*04. 2*

*05)* *01. 5* *02. 12* *03. 7* *04. 17*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவாதமாலா

பல்வேறு சுதேச கோத்திர இனக் குழுவினர் இன்றும் அங்கு வாழ்கின்றனர்.

மத்திய அமெரிக்காவில் அமைந்துள்ள குவாதமாலாவில் கி.பி. முதலாம் நூற்றாண்டில் இருந்து மாயா நாகரிகம் பரவி வியாபித்திருந்தது. அதன் பின்னர் 13 நூற்றாண்டுகளாக அந்நாடு ஸ்பெய்னின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தது. கி.பி 1821 இல் சுதந்திரம் அடைந்தது. இதன்பின் இங்கு ராணுவ மற்றும் சிவில் நிர்வாக முறை அமுலில் இருந்ததோடு, சுமார் 36 வருடங்களாக கெரில்லா யுத்தமும் தொடர்ந்தது.

புராதன மாயா நாகரிகத்திற்குரிய தொல் படிமங்களை அங்கு காணலாம்.

கெப்டன் ஜெனரல் இரா஁பாயெல் கரேரா 1854 ஆம் ஆண்டு முதல் மரணிக்கும் வரை அந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார்.

நாணயம் - குவட்சால்

அந்நாட்டின் பாரம்பரிய உடை

மாயா நாகரிக புராதன தொல்பொருட்கள் பல அங்குள்ளன.

## தேசிய பறவையும், மலரும்

தேசிய பறவை - க்வெட்சால் பறவை

தேசிய மலர் - வைட் நன் ஓர்கிட்

## இனங்கள்




## மொழி

ஸ்பானிய மொழி 60%

அமெரிந்திய மொழி 40%

## சமயம்

உரோமன் கத்தோலிக்கம்

புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம்

சுதேச மாயா நம்பிக்கைகள்

## அரசியல்

குவாதமாலா நாடாளுமன்றக் கட்டடம்.


ஜனாதிபதி ஒட்டோ பேரெஸ் மொலினா

மொத்த நிலப்பரப்பு சதுர கி.மீற்றர்

**107,159 km²**

மொத்த சனத்தொகை

**14,647,083**




## தலைநகரமும் பெரிய நகரமும்

## குவாதமாலாவின் இயற்கை வளம்

பெற்றோலியம், நிக்கல், சீக்கல்

களிமண் கைத்தொழில் சிறப்புற்றுள்ளது.

எண்ணெய் வளம் முக்கிய இடம் வகிக்கின்றது.

குவாதமாலாவின் நிக்கல் அகழ்வு.

கைகளால் தயாரிக்கப்படும் கண்ணாடிப் பொருட்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

கையால் பின்னப்படும் தோல் துணிக்கு புகழ்பெற்ற நாடு.

அந்நாட்டின் ஒரு கத்தோலிக்க தேவாலயம்.

அந்நிய ஆதிக்க காலத்திற்குரிய கட்டடங்களை இங்கு காணலாம்.

இங்குள்ள மலையகப் பிரதேசங்களில் எரிமலைகளைக் காணலாம்.

பல்வேறு காரணங்களால் அந்நாட்டில் அகதிகளானோர் பலர் உள்ளனர்.

கோப்பி, கரும்பு பயிர்ச்செய்கையுடன் காய்கறி பழவகைகளும் செய்கை பண்ணப்படுகின்றன.

வாசனைத் திரவியங்களும் பயிரிடப்பட்டுள்ளன.

அந்நாட்டின் ஒரு பாரம்பரிய நடனம்.

- (அ)


TOYOTA

கனவு கார் ஓவியப்போட்டி

சிறார்களின் எதிர்காலக் கனவு கார்...

உங்கள் கனவு காரினை வரைந்து அனுப்பி, 16 வயதிற்கு உட்பட்ட அனைத்து சிறுவர்களும் பெற்றோருடன் ஜப்பான் சென்றுவரும் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- ஓவியங்களை A3 (297மி.மி.x420மி.மி) அளவு பேப்பரில் சமர்ப்பிக்கவேண்டும்.
- விண்ணப்பப்படிவங்கள் மற்றும் போட்டி விபரங்களை உங்கள் பாடசாலையில் அல்லது இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- ஓவியங்களை தபால் மூலம் அனுப்பலாம் அல்லது எந்தவொரு டொயோடா லங்கா கிளையிலும் ஒப்படைக்கலாம்.
- வயது எல்லை:
  - 8 வயதிற்கு உட்பட்டோர்
  - 8 – 11 வயதிற்கு இடைப்பட்டோர்
  - 12 – 15 வயதிற்கு இடைப்பட்டோர்

முடிவுத் திகதி 2016 ஜனவரி 31

செதும்தி துலன்யா தேவகமகே
வயது எல்லை 1 - தங்க பதக்கம்
2015 டொயோடா கனவு கார் ஓவியப்போட்டி

நதுன் ஹேசல விஜேரத்ன
வயது எல்லை 2 - வெண்கல பதக்கம்
2015 டொயோடா கனவு கார் ஓவியப்போட்டி

கசந்துன் கயேந்திர ராஜபக்ஷ
வயது எல்லை 2 - சிறந்த இறுதித்தேர்வுக்கு
2015 டொயோடா கனவு கார் ஓவியப்போட்டி

டொயோடா லங்கா (பிரை) லிமிட்டட் 337, நீர்கொழும்பு வீதி, வத்தளை.

தொடர்புகளுக்கு 0777 939 000 / 011 2 944 750 மின்னஞ்சல் dreamcar@toyota.lk இணையதளம் www.dreamcar.lk

Approved by Ministry of Education Official Media Partner TOYOTA DREAM CAR ART CONTEST


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உதயகிரி குகை பிரவேசப் பாதை

# விஷ்ணுவின் ஆசி பெற்ற உதயகிரி குகைக் கோயில்

பண்டைய கால இந்துக் கோயில் குகையினையே 'உதயகிரி குகை' என்று கூறப்படுகின்றது. இந்த குகை இந்தியாவின் மத்திய பிரதேஷ் பகுதியில் உள்ள போபால் நகருக்கு தென்கிழக்குப் பகுதி நகரான விதிஷா என்ற இடத்தில் அமைந்துள்ளது. இந்த பகுதியின் மலைத்தொடரினை மையமாகக் கொண்டு இந்த கோயில் அமைந்துள்ளது. சூரியன் உதிக்கும் மலை என்று அர்த்தம் வரும் விதமாக உதயகிரி என்று பெயரிடப்பட்டுள்ளது. விதிஷா தேவியை நினைவுகூரும் முகமாக விதிஷா என்று நகருக்கு பெயரிடப்பட்டுள்ளது. விதிஷா தேவி இலங்கையர்களாகிய எமக்கு மிகவும் முக்கியமானவர். அசோக சக்கரவர்த்தியின் முதலாவது மனைவி மற்றும் இலங்கையில் பௌத்த மதத்தைப் பரப்பிய மகிந்து, சங்கமித்தா ஆகியோரின் அன்னையார் இவராவார்.

## சூரியன் உதிக்கும் மலை

உதயகிரி குகை உள்ள மலை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதி ஆங்கில A வடிவ ஆற்று மேட்டுநிலப்பகுதியில் அமைந்துள்ளது. உதயகிரி குகைகளில் சிறிய, பெரிய குகைகள் சுமார் 20 அளவில் உள்ளன. பௌத்த மதத்தினை தழுவி நிர்மாணிக்கப்பட்டுள்ள சிலைகள் கொண்ட குகைகள் சிலவும் இங்கு காணப்படுகின்றன. ஒரு சில குகைகள் பாதுகாப்புக் கருதி இரும்புக் கதவுகள் இடப்பட்டு மூடப்பட்டுள்ளன. அவற்றை பார்வையிட முடியாது அத்துடன், ஜைன மதத்தினை தழுவிய சில சிற்பங்களையும் இங்கு காணலாம்.


பன்றியின் தலையைக் கொண்ட விஷ்ணுவின் அவதாரம்

உதயகிரி குகையினை கற்களிலான படிக்கட்டு வழியே பார்வையிட செல்லும்போது அதன் பிரவேசப் பாதையில் உள்ள பாறைச் சுவற்றில் மாறுபட்ட உருவம் ஒன்றினைக் காண முடியும். இந்த உருவம் காட்டுப் பன்றியின் தலையைக் கொண்டதாக செதுக்கப்பட்டுள்ளது. அந்த உருவத்தின் அடிப்பாகத்தில் அவரை வணங்கும் பக்தர்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இது விஷ்ணுவின் ஓர் அவதாரமாகும்.

## இந்து குகை

உதயகிரி இந்து கோயில் குகையானது, குப்த பேரரசுக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது சந்திரகுப்த மன்னரின் ஆட்சிக்காலத்தில் இந்த குகை மறுசீரமைப்புக் குள்ளானது என்று வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. குப்த பேரரசுக் காலத்தின் வாஸ்துவியல் நிர்மாணிப்புகளில் குறிப்பிடக்கூடிய இடமாக இந்த குகை கோயில் தொகுதியினைக் குறிப்பிட முடியும். இந்திய தொல்லியல் திணைக்களத்தினால் இந்த குகை பராமரிக்கப்பட்டுள்ளதுடன், இன்று இப்பகுதி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பகுதியாகவும் உள்ளது.

## கனிங்ஹாம்

உதயகிரி குகைகளின் வரலாற்று முக்கியத்துவத்தினை இந்தியாவினை ஆக்கிரமித்த பிரித்தானியர்கள் உணர்ந்துகொண்டனர். அலெக்சாண்டர் கனிங்ஹாம் குகைகளை இலக்கங்களைப் பயன்படுத்தி வேறுபடுத்தியதுடன், பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் மலை உச்சியில் சிறிய பாதுகாப்பு அரணாக பிரித்தானிய இராணுவத்தினர் தங்குமிடத்தினை நிர்மாணித்துள்ளனர். இன்றும் இந்த தங்குமிடத்தின் இடிபாடுகளைக் காண முடியும்.


பிரித்தானியர்களினால் நிர்மாணிக்கப்பட்ட தங்குமிடம்

## குளிர்மையான சுற்றுப்புறம்

உலர்வான காலநிலை இங்கு காணப்படுகின்றது. கடுமையான சூரிய ஒளி காணப்பட்டாலும் சுற்றுப்பகுதி மிகவும் குளிர்மையானது. உதயகிரி மலை உச்சியில் வில்வம், கொட்டாங்காய், மூங்கில் மரங்கள் உள்ளன. உதயகிரி மலையின் உச்சியில் அசோக சின்னம் போன்ற சின்னத்தின் இடிபாட்டுச் சிதைவுகள் மற்றும் அரண்மனையின் இடிபாடுகளையும் காண முடியும்.எனினும், இந்த மலை உச்சியில் அசோக சின்னமோ, கோபுரமோ நிர்மாணிக்கப்பட்டதற்கான சான்றுகள் வரலாற்றில் இல்லை என்று தொல்லியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.


கீழ் நோக்கி செல்வதற்கான வழிப்பாதை


உச்சியை நோக்கிய படிக்கட்டுக்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உலகில் பிரபல்யமானவர்கள்



அலெக்சி ஆர்க்கிபோவிச் லியோனொவ் 1934 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி பிறந்தார். இவர், ரஷ்யாவின் இளைப்பாறிய விண்வெளி வீரரும், சோவியத் வான் படையின் ஜெனரலும் ஆவார். இவர் 1965 மற்றும் 1975 ஆகிய வருடங்களில் இரண்டு தடவைகள் சோவியத் ஒன்றியத்தின் 'வீரர் (Hero) ' விருது மற்றும் 'லெனின்' விருதையும் பெற்றுள்ளார்.

# அலெக்சி ஆர்க்கிபோவிச்

1965 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் திகதி சோவியத் விண்வெளி வீரர் அலெக்சி ஆர்க்கி போவிச் லியோனொவ் வஸ்கோத் விண்கலம் ஒன்றில் இருந்து வெளியேறி 12 நிமிடங்கள் நடமாடி விண்வெளியில் சாதனை படைத்ததோடு, விண்வெளியில் நடமாடிய 'முதல் மனிதன்' என்ற பெருமையை தனதாக்கிக்கொண்டார். விண்வெளி வரலாற்றில் இளைப்பாறிய விண்வெளி வீரர் அலெக்சி ஆர்க்கிபோவிச் மறக்க முடியாத வீரர் ஆவார்.

தொகுப்பு: ஜுனைட் எம்.பஹ்த்

# இனி இப்படிப் பாவிப்போமே



மடிக் கணியை படத்தில் காட்டியவாறு பாவிப்பதால் சில உடல் உபாதைகளிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியுமென விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# தெரிந்து கொள்வோம்

* 'பாம் ஜுனமரா' என்ற செயற்கைத் தீவு எங்கு அமைந்துள்ளது?



துபாய் நகரில் அமைந்துள்ளது

* 'சிரிஸ்' எனும் கோள் எங்கே அமைந்துள்ளது?



ஞாயிற்றுத் தொகுதியில் செவ்வாய்-வியாழன் கோள்களுக்கிடையில் அமைந்துள்ளது

* டியகோ கார்சியா தீவுகளின் முக்கியத்துவம் என்ன?

இங்கு ஐ.அமெரிக்காவின் போர் விமானத்தளம் அமைந்துள்ளது



* எம்பெக்க விகாரையை கட்டுவித்த மன்னன் யார்?

4 ஆம் புவனேகபாகு மன்னன்





* 24 ஆவது பொதுநலவாய நாடுகளின் மகாநாடு நடைபெற்ற நாடு எது?

மோல்டா தீவு



* உலகிலேயே மிகப் பெரிய 'ஹில்டன்' ஹோட்டல் எங்குள்ளது?

ஐக்கிய அமெரிக்காவில்

தொகுப்பு: உடுவை பரந்தாமன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்ணீரின் கதை

*மனதில் கவலை அல்லது துயரமான சம்பவங்களுக்கு முகங்கொடுத்தால் கண்களில் ஏன் கண்ணீர் சுரக்கின்றது என்று நீங்கள் சிந்தித்துப் பார்த்திருக்கின்றீர்களா? இந்த விடயம் பற்றி விஞ்ஞானிகள்கூட இதுவரை கண்டறியவில்லை. எனினும், கண்ணீர் சுரப்பது குறித்து பலவிதமான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.*

கண்ணீர்ச் சுரப்பியிலிருந்து சுரக்கப்படும் கண்ணீர் ஆனது, கண்ணீர் குழாய்களின் வழியாக வெளிவருகின்றது. மன உணர்ச்சியின் வெளிப்பாடாகவே கண்ணீர் உருவாகின்றது. இதுவே 'அழுகை' எனப்படுகின்றது. அழுவதன்மூலம் மன உணர்வுகள் சமநிலை அடைவதுடன், மன அழுத்தம் குறைவடைகின்றது. அதுமட்டுமன்றி, அழுகையினூடாக மன உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரே உயிரினம் மனிதன் ஆகும். யானைகளும் கொரில்லாக் குரங்குகளும் அழுவதாகக் குறிப்பிடப்பட்டாலும், அதனை ஆய்வுகள் மூலம் இன்னும் நிரூபிக்கவில்லை.

ஆண்-பெண் வேறுபாடுகளுக்கமையவும் ஒவ்வொருவரின் மன உணர்ச்சிகளைப் பொறுத்தும் அழுகை மாறுபடுகின்றது. அழுகை ஏற்படுவதற்கு பல உயிரியல் காரணங்களும் ஏதுவாகக் கூறப்படுகின்றன. மன அழுத்த நிலையைக் குறைக்கவும், உடலிலுள்ள நச்சுத்தன்மையை போக்கவும் கண்ணீருக்கு ஆற்றல் உண்டு என்று கண்டறியப்பட்டுள்ளது.

## கண்ணீர் அமைப்பு




## மூன்று வகைகள்

கண்ணீர் மூன்று வகைப்படும். அவையாவன;

- கழுவும் கண்ணீர்
- பிரதிபலிப்புக் கண்ணீர்
- உணர்வெழுச்சிக் கண்ணீர்

### கழுவும் கண்ணீர்: (Basal tears)

எமது கண்கள் முழுமையாக உலர்வடைவதனைத் தடுக்க இவ்வகை கண்ணீரே உதவுகின்றது. இது புரதம் அதிகமாகக் கொண்ட பெக்டீரியா தடுப்பு திரவமாகும். நாம் கண் இமைக்கும் ஒவ்வொரு தடவையும் இந்த திரவம் எமது கண்களில் ஈரத்தன்மையைப் பேணுகின்றது. கண்களுக்கு போஷாக்களித்தல், பாதுகாப்பு மற்றும் ஈரளிப்பினை வழங்குவதும் இவ்வகை கண்ணீரே ஆகும். மனித உடலிலிருந்து இந்த வகையான கண்ணீர் நாளாந்தம் சராசரியாக 5 முதல் 10 அவுன்ஸ் உற்பத்தியாகின்றது. இந்த கண்ணீர் மூக்குத் துவாரங்களினூடாக கீழ் நோக்கி வருகின்றது.

### பிரதிபலிப்புக் கண்ணீர்: (Reflex tears)

வெங்காயம் உரித்தல், புகை, அதிக வெளிச்சம், அதிக குளிர் மற்றும் தூசு கொண்ட காற்று போன்றவை காரணமாக ஏற்படும் பாதிப்புகளிலிருந்து இந்தவகை கண்ணீரே எமது கண்களைக் காக்கின்றது. பாதிப்புகளை எதிர்கொள்ளும் போது கண்களில் உள்ள உணர்ச்சி நரம்புகள் மூளைக்கு தகவல் அனுப்புகின்றன. இதன் விளைவாக, மூளையிலிருந்து இமைகளுக்கு ஹோமோன் அனுப்பப்படுகின்றது. இந்த ஹோமோன்களால் கண்களில் கண்ணீர் சுரக்கின்றது. இந்த வகை கண்ணீரில் 98 சதவீதம் நீர் அடங்கியுள்ளது.

### உண... கண்... (Emo...

மூளையி... கண்ணீரின்... றது. இந்த ... என்டோர்ஃ... இயற்கை ... பல ரசாய... அடங்கியு...

### மூன்று...

...து கண... சிறு துளி க... படலங்கள்... அறிவீர்கள... எண்ணெய்... வாகும்.

- எண்ணெ... வெளிப்பகு... இந்த பட... கண்ணீர் ஆ... மட்டுப்படு...
- நீர்: இ... அடர்த்திய... மற்றும் பெ...

- நாம் கண்களை இமைக்கும்போது கண்களுக்கு ஈரளிப்பு கிடைப்பதுடன் போஷாக்கும் கிடைக்கின்றது. அத்துடன், கண்களின் முன்பகுதியும் பாதுகாக்கப்படுகின்றது.
- மூக்குக்கண்ணாடி மற்றும் Sunglass அணியும்போது கண்ணீர் ஆவியாவது தடுக்கப்படுகின்றது.
- வேதனை, கவலைகளின்போது அழுகையின்றி இருப்பது ஒரு நோயாகக் கருதப்படுகின்றது.
- ஒரு நபரால் நாளாந்தம் 10 அவுன்ஸ், வருடாந்தம் 30 கலன்கள் என கண்ணீர் சுரக்கப்படுகின்றது.
- கணினியினை அடிக்கடி

சுவா... தக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த தெரியுமா?

ண்களில்
இந்த
சதவீதம் நீர்

**✱ உணர்வெழுச்சிக் கண்ணீர்: (Emotional tears)**

மூளையிலிருந்தே இந்த வகை கண்ணீரின் ஆரம்பம் நிகழ்கின்றது. இந்த கண்ணீரில் என்டோர்ஃபின் மற்றும் இயற்கை வலி நிவாரணி உட்பட பல ரசாயன பதார்த்தங்கள் அடங்கியுள்ளன.

## மூன்று படலங்கள்

...து கண்களிலிருந்து வரும் சிறு துளி கண்ணீரில் மூன்று படலங்கள் இருப்பதனை நீங்கள் அறிவீர்களா? அவைதான் எண்ணெய், நீர், சளி என்பனவாகும்.

✱ எண்ணெய்: கண்ணீரின் வெளிப்பகுதியில் இருக்கும் இந்த படலம் காரணமாக, கண்ணீர் ஆவியாகும் வேகம் மட்டுப்படுத்தப்படுகின்றது.

✱ நீர்: இந்த படலம் மிகவும் அடர்த்தியானது. இதில் சோடியம் மற்றும் பொட்டாசியம் போன்ற இலக்ட்ரோலைட் மற்றும் புரதங்கள், க்ளுகோஸ் உட்பட, மேலும் சில பதார்த்தங்களும் அடங்கியுள்ளன.


✱ சளி: இது, கண்களில் கண்ணீரைப் பரப்பி கண்களுக்கு ஈரளிப்பினை வழங்குகின்றது.

## கலவை


கண்ணீரில் நீர், சீனி, கொழுப்பு, கனியுப்புகள், ஹோமோன்கள் மற்றும் புரதங்கள் என்பன அடங்கியுள்ளன. கண்ணீரின் கலவை நாளுக்குநாள் மாறுபடக் கூடும். உங்கள் ஆரோக்கியம் மற்றும் வேறு காரணிகள் கண்ணீரின் கலவையை தீர்மானிக்கின்றன. கண்ணீருக்கு மணம் இல்லை.

## கண்ணீரின் தொழிற்பாடுகள்

கண்களுக்கு சிறந்த பார்வையை வழங்குவதற்கும் கண்களை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கும் தூசுகளிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கும் கண்ணீர் உதவுகின்றது. மேலும், கண்களுக்கு ஒக்சிஜன் மற்றும் போஷாக்கினை வழங்குவதுடன், கண்களிலிருந்து கழிவுகளை அகற்றவும் கண்ணீர் உதவுகின்றது. சிறந்த பார்வைப் புலனையும் வழங்கும். அதுமட்டுமன்றி, நமது உணர்ச்சிகளின் அழுத்தங்களை வெளியேற்றவும் கண்ணீர் துணைபுரிகின்றது.



## கண்ணீரின் மூன்று படலங்கள்




## தொடர்பாடல் ஊடகம்

புதிதாகப் பிறந்த குழந்தைகளின் தொடர்பாடல் ஊடகம் கண்ணீர் ஆகும்.பெற்றோரின் கவனத்தினை அழுகையின்மூலம் குழந்தைகள் பெற்றுக்கொள்கின்றன. வயது வந்தவர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தவும், மற்றொருவரின் கவனத்தினையும் அனுதாபத்தினையும் பெறும் நோக்கிலும் கண்ணீர் சிந்துவதைக் காணலாம்.

-பிரியா

## அழுகையின் நன்மைகள்

✱ வேதனை மற்றும் கவலையினால் அழும்போது மனதுக்கு ஆறுதலாக இருப்பதாகவும், மன அழுத்தம் மற்றும் இதர அதிர்ச்சிகளினால் உடலில் சேரும் நச்சுப் பதார்த்தங்கள் கண்ணீரினால் இயற்கையாக வெளியேற்றப் படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

✱ உணர்வுபூர்வமான அழுகையானது, நம்மை ஆறுதல் படுத்தும் ஒரு வழிமுறையாகும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். நீண்டகாலமாக உணர்வுகளை மனதில் அடக்கிக்கொண்டிருப்பது ஆபத்தானது என்றும் கண்ணீரை அடக்குவது இதய நோய்களுக்கும் மன அழுத்தத்திற்கும் காரணமாக அமையும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

✱ மன அழுத்தத்துடன் தொடர்புடைய ரசாயனங்கள் எமது உடலிலிருந்து வெளியேறாவிடின், அவை எமது உடலில் தேங்கி நோய் எதிர்ப்புச்சக்தி மற்றும் இதர உயிரியல் பகுதிகளை பாதிக்கின்றன.





## சுவாரஸ்யமான தகவல்கள்

னை
து
ளிப்பு

களின்
பாதுகாக்கப்படுகின்றது.

ணாடி மற்றும்
யும்போது கண்ணீர்
டுக்கப்படுகின்றது.

கவலைகளின்போது
இருப்பது ஒரு
ப்படுகின்றது.

நாளாந்தம் 10
டாந்தம் 30 கலன்கள்
ரக்கப்படுகின்றது.

னை அடிக்கடி பார்ப்பதனால் கண்கள் உலரும் தன்மைக்குள்ளாகின்றன. கணினியினை உற்றுப் பார்ப்பதனால் கண் இமைப்பது தடுக்கப்படுகின்றது. இதனால், கண்களை ஈரளிப்பாக்கும் இயற்கை செயற்பாடு தடுக்கப்படுகின்றது.

✱ முதுமை அடையும்போது கண்ணீர் சுரக்கும் அளவு குறைகின்றது.

✱ ஒருவர் அழும்போது முதலில் அவரது வலது கண்ணிலிருந்து கண்ணீர் சிந்துமாயின் அது ஆனந்தக் கண்ணீராகும். அதுவே, இடது கண்ணிலிருந்து முதலில் கண்ணீர் சிந்துமாயின் அது வேதனை மற்றும் கவலையினால் வரும் கண்ணீராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் 21 ஆவது தேசிய பூங்காவாக 'உஸ்ஸன்கொட தேசிய பூங்கா' உள்ளது. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள இப்பூங்காவானது, அந்த மாவட்டத்தின் மூன்றாவது தேசிய பூங்கா வாகத் திகழ்கின்றது. இது 349 ஹெக்டெயர் பரப்பளவை கொண்டது.




# உஸ்ஸன்கொட தேசிய பூங்கா









உஸ்ஸன்கொட பகுதியானது, வரலாற்று முக்கியத்துவம் மிக்கதொரு பிரதேசமாகும். செந்நிறத்திலான தரைத்தோற்றத்தைக் கொண்ட இப்பிரதேசத்தில் உள்ள அகழ்வாராய்ச்சித் தளங்களிலிருந்து வரலாற்றுக்கு முற்பட்ட தொல்பொருள் சான்றுகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. முன்னொரு காலத்தில் இங்கு விண்பொருள் ஒன்று விழுந்த காரணத்தினாலேயே இந்த பிரதேசத்தின் நிலம் செந்நிறம் கொண்டதாக காட்சி அளிப்பதாக நம்பப்படுகின்றது. மில்லியன் கணக்கான வருடங்களுக்கு முன்னர், கடலால் மேல்நோக்கி உயர்த்தப்பட்ட பிரதேசமாகவும் இதனை கருதுகின்றனர்.


பூந்தல-கலமெட்டிய-உஸ்ஸன்கொட பிரதேசங்கள் பண்டைய கால மனிதர்கள் வாழ்ந்த பிரதேசங்களாக் வரலாற்று நிபுணர்களால் குறிப்பிடப்படுகின்றன. இப்பகுதியிலிருந்து கிடைக்கப்பெற்ற சில கல் ஆயுதங்கள் ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தவை என இந்நாட்டின் முன்னணி தொல்பொருளியலாளர்களால் காலம் கணிக்கப்பட்டுள்ளது.


இப்பகுதியானது, உலர் வலயம் கலந்த என்றும் பசுமையான காட்டு வலயத்திற்குரிய பிரதேசமாக இருந்தாலும், இங்கு அடர்ந்த மரங்களுடன்கூடிய காடுகளை காணமுடிவதில்லை. மாறாக, முட்புதர்கள் நிறைந்ததும் பசுமையான புற்களைக் கொண்டதுமான திறந்தவெளிகளாகவே பெரும்பாலான பகுதிகள் காணப்படுகின்றன. இன்னும் சில பகுதிகள் தாவரங்கள் எதுவுமற்ற மண் மேடுகளாக் காணப்படுகின்றன. கடலோரத்தில் மகா ராவணா போன்ற உயரமான தாவரங்கள் வளர்ந்துள்ளன. ஆனால், தரைப்பகுதியில் தாவர பல்வகைமை வேறுபட்டுள்ளதைக் காணலாம். ஓரளவு வெப்பமான மற்றும் கடல்காற்றுக்கு தாக்குப்பிடிக்கும் வகையில் இப்பிரதேசம் இருப்பதனால், இங்கு உயர்ந்து வளரும் தாவரங்கள் மிகவும் குறைவு.

இப்பிரதேசமானது, கடல் மற்றும் தரைசார் உயிரியல் பல்வகைத் தன்மையில் பெருமளவு வளங்கள் நிறைந்த நிலப்பகுதியாக கருதப்படுவதோடு, கடலாமைகளின் சிறந்த வாழ்விடமாகவும் உள்ளது. ஆக, உயிரியல் ரீதியிலும் தொல்பொருளியல் ரீதியிலும் புவியியல் ரீதியிலும் அதிக பெறுமதியைக் கொண்ட நிலப்பகுதியாக உஸ்ஸன்கொட தேசிய பூங்கா கருதப்படுகின்றது. இந்த சிறப்பியல்புகளைக் கருத்தில்கொண்டே இலங்கையின் தேசிய பூங்காக்களில் ஒன்றாக 2010 ஆம் ஆண்டு இது பிரகடனப்படுத்தப்பட்டது.

-ஜெ







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘பொலித்தீன்’ பாவனைக்குத் தடை





சுற்றாடல் மற்றும் உயிர் வாழ்க்கைக்கான அச்சுறுத்தல் என்பனவற்றைக் கருத்தில்கொண்டு 2016 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இலங்கையில் மெல்லிய பொலித்தீன் அதாவது 20 மைக்ரோனுக்குக் குறைவான பொலித்தீன்களின் உற்பத்தி,விநியோகம், பயன்பாடு என்பனவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இவை தவிர, உணவுகளை பொதியிடுவதற்காக மீள் சுழற்சிக்குட்படுத்தப்பட்டு தயாரிக்கப்படும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பயன்பாட்டிற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின்படி, மெல்லிய லன்ச் ஷீட் மற்றும் மெல்லிய ஷொப்பிங் பேக்குகளுக்கு இதன்மூலம் தடை விதிப்பதும் பிரதான நோக்கமாகும். இத்தகைய பொருட்கள் பெரும்பாலும் 20 மைக்ரோனுக்கு குறைவான பொலித்தீனினால் ஆனவை. இவற்றை மீள் சுழற்சிக்குட்படுத்த முடியாமல் இருப்பதே தடைக்கான காரணமாகும்.

## இலைகளில் பொதி செய்யப்பட்ட உணவு

எமது முன்னோர்கள் உணவுகளை இலைகளில் சுற்றிக் கட்டியே எடுத்துச் சென்றனர். வாழையிலைகள் அல்லது தாமரை இலைகளில் உணவுகள் பொதி செய்யப்பட்டன.

இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் உணவு சுவையாகவும் பாதுகாப்பாகவும் இருந்தது. ஆனால், பொலித்தீன்களில் பொதி செய்யப்படும் உணவுகள் விரைவில் பழுதடைவதற்கான சாத்தியம் அதிகம். எவ்வாறாயினும்,






இன்றைய காலத்தில் பணிபுரியும் இடங்களுக்கும் பாடசாலைகளுக்கும் உணவுகளை பொலித்தீன்களில் பொதி செய்து எடுத்துச் செல்லவே நாம் பழக்கப்பட்டிருக்கின்றோம்.

20 மைக்ரோனைவிட, அதிக அடர்த்தி கொண்ட பொலித்தீனைக் கொண்டு லன்ச் ஷீட் மற்றும் பொலித்தீன் பைகளை தயாரிக்க முடியும். எனினும், சில உற்பத்தியாளர்கள் கல்சியம் மற்றும் மாஸ்டர் பெட்ச் பதார்த்தங்களைப் பயன்படுத்தி பொலித்தீனின் அடர்த்தியினை செயற்கை முறையில் அதிகரிக்க முனைகின்றனர். இதனால், எமது உடலில் சேரும் விஷத்தின் அளவு அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, உணவுகளை இலைகளில் பொதியிடுவது மிகவும் இலகுவான முறையாகும் என்பதோடு, ஆரோக்கியமான முறையாகவும் உள்ளது.







## சிந்தனைகளில் மாற்றம் தேவை

உலகில் வாழும் உயிரினங்களுக்கு ஆபத்தினை ஏற்படுத்தக்கூடியதும்; சுற்றாடல், நீர் மற்றும் காற்று மாசடைவுக்கு பிரதான காரணியாகவும் இருக்கின்ற ஒரு மாசுபடுத்தியாக பொலித்தீன் அடையாளப்படுத்தப்படுகின்றது. பொலித்தீனினால் 50 சதவீதமான கழிவுகள் எமது உடலில் சேர்கின்றன. மழைக்காலங்களில் வடிகால்களினூடாக நீர் வடிந்தோடுவதற்கு இந்த பொலித்தீன் உற்பத்திகள் தடையாக உள்ளன. பிராணிகள் இவற்றை உட்கொள்வதனால் மரணிக்கின்றன. பொலித்தீன் தகனத்தின்போது, வெளியாகும் நச்சு வாயுக்கள் காரணமாக, உயிரினங்களின் இனப்பெருக்கம் பாதிப்படைவதாகவும் புற்றுநோய்கள் ஏற்படுவதாகவும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

எனவே, பொலித்தீனினால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் சுற்றாடல் பாதிப்புகள், சுற்றாடல் மாசடைவுகள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு அளிப்பதும் கட்டாயமாகும்.அத்துடன், நாம் இலகுத் தன்மையினை மட்டும் கருத்திற்கொள்ளாமல், எமது ஆரோக்கியம் குறித்தும் சுற்றாடல் பாதுகாப்பு குறித்தும் கருத்தில்கொண்டு செயல்படுவது பிரதான கடமையாகும்.

## நரிவால் ஓர்கிட்



* தாவரவியல் பெயர்: *Rhynchostylis retusa*
* குடும்பம்: Orchidaceae

ஓர்கிட் தாவரப் பிரிவினைச் சேர்ந்த நரிவால் ஓர்கிட் தாவரத்தில், வெண்மை மற்றும் ஊதா நிறம் கலந்த பூக்கள் பூக்கும். தாவர பாதுகாப்பு சட்டத்தின்கீழ் பாதுகாக்கப்படும் ஒரு தாவர இனமாக நரிவால் ஓர்கிட் திகழ்கின்றது. அழியும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ள உயிரிகள் தொடர்பான சர்வதேச வர்த்தக உடன்படிக்கையின் இரண்டாம் பிரிவினுள்ளும் இத்தாவர இனம் சேர்க்கப்பட்டுள்ளது.



‘Foxtail Orchid’ என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இத்தாவரம், புதர் போன்று வளரக்கூடியது. இதில் கொத்துக் கொத்தாகப் பூக்கள் பூக்கும். நவம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையிலான காலப்பகுதியில் இத்தாவரம் பூக்கத் தொடங்கும். மிகவும் அரிய தாவர இனமாக கருதப்படும் நரிவால் ஓர்கிட் ஆனது; இலங்கை, மலேசியா, மியன்மார் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் வளரும். இலங்கையில் ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரிய மரங்களுக்கிடையில் இது வளர்கின்றது. இலங்கையிலிருந்து அழியும் அபாயத்தினை எதிர்கொண்டுள்ள தாவர இனமாக இது அறியப்படுகின்றது. மருத்துவ தேவைகளுக்காகவும் வீடுகளில் அலங்காரத்திற்காகவும் வளர்க்கப்படுகின்றது. இலங்கையின் ஊவா மாகாணத்திற்குரிய பூவாக நரிவால் ஓர்கிட் பூ பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் அம்மா-சரத் ஆகியோருக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

**සරත්:** **අම්මේ! මම සවස් වෙලා කමල්ගේ ගෙදර යනවා.**
அம்மே! மம சவஸ் வெலா கமல்கே கெதற யனவா.
**சரத்:** **அம்மா! நான் பின்னேரம் கமல் வீட்டுக்குப் போகிறேன்.**

**අම්මා:** **සවස් වෙලා යන්නේ ඇයි?**
சவஸ் வெலா யன்னே எய்?
**அம்மா:** **பின்னேரம் ஏன் போறீங்க?**

**සරත්:** **ලබන සතියේ විභාගෙනේ අම්මේ.**
லபன சதியே விபாகெனே அம்மே.
**சரத்:** **அடுத்த வாரம் பரீட்சைதானே அம்மா.**

**මට ගණන් ටිකක් අමාරුයි. කමල් කියලා දෙන්නම් කිවුවා.**
மட்ட கணன் டிக்கக் அமாருய். கமல் கியலா தென்னம் கிவ்வா.
**எனக்குக் கணிதம் கொஞ்சம் கஷ்டம். கமல் சொல்லித் தருவதாகச் சொன்னான்.**

**අම්මා:** **කමල් ගණන්වලට දක්ෂ ද?**
கமல் கணன்வலட்ட தக்ஷ த?
**அம்மா:** **கமல் கணிதத்தில் கெட்டிக்காரனா?**

**සරත්:** **ඔව්. එයාට තමා පන්තියේ හැමදාම ගණන්වලට ලකුණු වැඩි.**
ஒவ். எயாட்ட தமா பந்தியே ஹெமதாம கணன்வலட்ட லகுணு வெடி.
**சரத்:** **ஆம். அவனுக்குத்தான் வகுப்பில் எப்போதும் கணிதத்திற்கு அதிக புள்ளி கிடைக்கிறது.**

**අම්මා:** **ඇත්තද? කමල් හොඳ ළමයා.**
எத்தத? கமல் ஹொந்த ளமயா.
**அம்மா:** **அப்படியா? கமல் நல்ல பிள்ளை.**

**සරත්:** **අපි දෙන්නම එකතු වෙලා ගණන් හදනවා. එතකොට මට අමාරු තැන් එයා කියලා දෙන්නම් කිවුවා.**
அப்பி தென்னம எகது வெலா கணன் ஹதனவா. எதகொட்ட மட்ட அமாரு தென் எயா கியலா தென்னம் கிவ்வா.
**சரத்:** **நாம் இருவரும் இணைந்து கணக்குகள் செய்யப் போகிறோம். அப்போது எனக்குக் கஷ்டமானவற்றை அவன் சொல்லித் தருவதாகச் சொன்னான்.**

**අම්මා:** **හොඳයි. එහෙනම් ගිහින් එන්න.**
ஹொந்தய். எஹெனம் கிஹின் என்ன.
**அம்மா:** **நல்லது. அப்படியென்றால் போய் வாருங்கள்.**



**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. கமல் வீட்டுக்குப் போகிறேன்.
..................................................
ii. அடுத்த வாரம் பரீட்சை.
..................................................
iii. நல்லது. போய் வாருங்கள்.
..................................................




## கலப்பு வாக்கியம்
## Complex Sentence

**When** எனும் சொல்லை இணைக்கும் சொல்லாகக் (Joining Word) கையாண்டு ஒன்றிணைக்கப்பட்ட கலப்பு வாக்கியங்களை மேலும் இங்கே பயில்வோம்.

அ) When the rain started, the people ran for shelter.
மழை ஆரம்பித்தபோது, மக்கள் ஒதுங்கிடத்தை நோக்கி ஓடினர்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

* When the rain started,
மழை ஆரம்பித்தபோது,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* The people ran for shelter.
மக்கள் ஒதுங்கிடத்தை நோக்கி ஓடினர்.
(பிரதம வாக்கியப் பகுதி -Chief Claus)

ஆ) When the teacher entered the classroom, the children stopped shouting.
ஆசிரியர் வகுப்பறைக்குள் பிரவேசித்தபோது, சிறுவர்கள் சத்தமிடுவதை நிறுத்தினர்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

* When the teacher entered the classroom,
ஆசிரியர் வகுப்பறைக்குள் பிரவேசித்தபோது,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* The children stopped shouting.
சிறுவர்கள் சத்தமிடுவதை நிறுத்தினர்.
(பிரதம வாக்கியப் பகுதி -Chief Claus)

இ) When the train arrived at the station, we quickly got into it.
ரயில் வண்டி நிலையத்தை வந்தடைந்தபோது, நாங்கள் விரைவாக அதனுள் ஏறினோம்.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

* When the train arrived at the station,
ரயில் வண்டி நிலையத்தை வந்தடைந்தபோது,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* We quickly got into it.
நாங்கள் அதனுள் விரைவாக ஏறினோம்.
(பிரதம வாக்கியப் பகுதி -Chief Claus)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கராட்டே' யில் இலங்கைக்கு 20 பதக்கங்கள்



இந்தியாவில் நடைபெற்ற 26 ஆவது சர்வதேச பகிரங்க கராட்டே போட்டியில் இலங்கை போட்டியாளர்கள் சிறப்பாக போட்டியிட்டு 07 தங்கம், 08 வெள்ளி, 05 வெண்கலம் என மொத்தமாக 20 பதக்கங்களை வென்று இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

கடந்த டிசம்பர் 27ஆம், 28 ஆம் திகதிகளில் இந்தியாவின் குன்னூர் பகுதியில் நடைபெற்ற மேற்படி போட்டிகளில் இலங்கை உட்பட அவுஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில்1100 போட்டியாளர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# ஜனவரி 25 ஆம் திகதி தேசிய விளையாட்டு வாரம்...!



இம்மாதம் (ஜனவரி) 25 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை தேசிய விளையாட்டு மற்றும் உடல் ஆரோக்கிய வாரமாக அனுஷ்டிக்கப் படவுள்ளதுடன், இதனை யொட்டி விசேட தினம் ஒன்று அறிவிக்கப்படவுள் ளதாகவும் விளையாட் டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலுள்ள மக்களில் கணிசமானோர் தொற்றா நோய்களினால் பாரிய அவதிக்கு உள்ளாகி வருகின்றமையை கவனத்தில் கொண்டே மேற்படி வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தவறான உணவு முறை, போதிய உடற்பயிற்சி இன்மை போன்ற காரணங்களினாலேயே அநேகமானோர் இவ்வாறு தொற்றா நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர். இவர்களை இந்நிலையிலிருந்து மீட்கவும், ஏனையவர்கள் இந்நிலைக்கு ஆளாவதை தவிர்ப்பதற்கும் விளையாட்டுப் பயிற்சிகள், உடற்பயிற்சிகள் ஆகியவற்றின் மீது மக்களின் கவனத்தை ஈர்க்கச் செய்து ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும் என்று விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வாரத்தையொட்டி பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நாடு பூராவும் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மஹேலவை எவரும் ஏலத்தில் எடுக்கவில்லை




எதிர்வரும் பெப்ரவரி மாதம் அபுதாபியில் நடைபெறவுள்ள பாகிஸ்தான் பிரிமியர் லீக் போட்டிகளுக்கென நடத்தப்பட்ட ஏலம் கோரலில் இலங்கை வீரர்களில் குமார் சங்கக்கார, திலகரட்ண டில்ஷான் ஆகிய இருவர் மாத்திரமே ஏலத்தில் விலைகோரப் பட்டு அணியில் இடம்பெற்றுள்ளனர். எனினும், இலங்கை அணியின் மற்றுமொரு சிறப்பு வீரராக இருந்த மஹேல ஜயவர்தன இந்த ஏலத்தில் விலை கோரப்படாதது சுட்டிக்காட்டத்தக்க ஒரு விடயமாக கருதப்படுகின்றது.

மேற்படி போட்டிகளுக்கான ஏலம் கோரலுக்கு இலங்கை சார்பாக 19 வீரர்களின் பெயர் பட்டியல் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவர்களில் சங்கக்கார, டில்ஷான் ஆகிய இரண்டு பேர் மாத்திரமே விலை கோரப் பட்டுள்ளனர்.

மேலும் பீற்றர்சன், கிரிஸ்கெய்ல், பிராவோ, டெரன் சம்மி, விக்பி அல் ஹசன், என்ட்ரி ரஸல் ஆகியோர் கூடிய விலை கோரலில் ஏலத்தில் வாங்கப்பட் டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணியின் பயிற்றுனராக வெளிநாட்டவர்



இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுனராக வெளிநாட்டவர் ஒருவர் நியமிக்கப்படக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இது குறித்து புதிய நிர்வாகக் குழு சிந்தித்து வருவதாகவும் கூறப்படுகின்றது. இருப்பினும் புதிய பயிற்றுனர் யார் என்பது இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. இலங்கை அணி நியூஸிலாந்து போட்டித் தொடரை முடித்துக் கொண்டு நாடு திரும்பியவுடன் புதிய பயிற்றுனர் குறித்து மேலும் தீவிரமாக கலந்தாலோசிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் பதவிக்கு வாக்கெடுப்பின்மூலம் திலங்க சுமதிபால தெரிவாகியதையடுத்து கடந்த 4 ஆம் திகதியன்று அவர் தனது, கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். திலங்க சுமதிபால நான்காவது தடவையாக இப்பதவிக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் 1998, 2000, 2003 ஆகிய வருட காலப்பகுதிகளிலும் இவர் இலங்கை கிரிக்கெட் சபைக்கு தலைவராக தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் சாரணர் உலகம்

## தண்ணீர்ப் போத்தலில் வெங்காயச் செடி வளர்ப்போம்!



சாரணர் குழு செயற்பாடாக மேற்கொள்ளக் கூடிய இந்த செயற்பாட்டிற்கு பெரிய அளவிலான தண்ணீர்ப் போத்தல் தேவைப்படும். தண்ணீர்ப் போத்தலில் படத்தில் காட்டியவாறு துவாரம் இட்டு அதனுள் பசலை மண்ணை நிரப்புங்கள். போத்தலின் துவாரங்களில் வெங்காயத்தினை ஒவ்வொன்றாகத் திணித்து அதன் இலைகள் வளர்ந்து வெளிவர இடமளிக்க வேண்டும்.

வீட்டுத் தோட்ட அலங்காரத்திற்கும் குழு முகாம் செயற்பாட்டின் போது உணவு தயாரிக்கவும் பயன்படுத்தக்கூடிய இந்த செயற்பாட்டினை நீங்களும் செய்து பாருங்கள்.

## மினி கெஜட் ஜம்போரி பற்றி...



இலங்கையில் நடைபெறவுள்ள முதலாவது மினி கெஜட் ஜம்போரியில் உங்களைப் பதிவு செய்துகொள்ளலாம். தனி நபர் மற்றும் குழு ரீதியிலான போட்டிகள் நடைபெறுவதுடன், இளம் பயிற்சி, சாரணர், பகிரங்க ஆகிய பிரிவுகளில் நீங்கள் பங்குபற்ற முடியும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி 2016 ஜனவரி 16 வரை நீடிக்கப்பட்டுள்ளது. பெயர், முகவரி, பாடசாலை, இணைய முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் சாரணர் பேராசிரியர் மற்றும் இளம் சாரணர் பயிற்சியாளரின் சிபாரிசு சகிதம் விண்ணப்பப்படிவத்தினை கீழ் வரும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

தேசிய மினி கெஜட் ஜம்போரி,
விஜய் சாரணர் முகாம்,
த.பெ. 2037, கொழும்பு.

### பரிசில்களும் சான்றிதழ்களும்

பங்குபற்றும் அனைவருக்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழ் வழங்கப்படுவதுடன், ஒவ்வொரு போட்டிப் பிரிவுகளில் முதல் மூன்று இடங்கள் தெரிவுசெய்யப்படும்.

### சாரணர் முடிச்சுகளை இடுங்கள்

மினி கெஜட் ஜம்போரி தொடர்பில் முன்வைக்கப்படும் படைப்புகளில் இருக்க வேண்டிய அடிப்படை இயல்புகள் குறித்து கடந்த வாரங்களில் உங்களுக்கு தெரியப்படுத்தியிருந்தோம். நீங்கள் உருவாக்கும் உபகரணத்தில் பயன்படும் சாரணர் முடிச்சு மற்றும் சரிவு குறித்து கவனம் செலுத்தப்படல் வேண்டும். உதாரணமாக, உங்கள் மினி கெஜட் உபகரணத்தில் பயன்படும் நாற்சதுர சரிவு, குறுக்கு சரிவு, வட்ட சரிவு, கத்தரி சரிவு, ஆண் முடிச்சு, பாய்மர முடிச்சு ஆகியவற்றை மிகவும் சரியாகவும் துல்லியமாகவும் இடுதல் வேண்டும்.



# பத்தாயிரம் மரங்கள் நடுவோம்!



*சர்வதேச சாரணர் சுற்றாடல் வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது. அதற்கு தேவைப்படும் அனைத்து ஆலோசனைகள் குறித்து சர்வதேச சாரணர் தலைமையகம் தற்போது அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.*



மர நடுகை நிகழ்ச்சித் திட்டத்திற்காக தெதுரு ஓய பகுதிக்கு சாரணர்களும் சாரணியர்களும் வருகை தந்தமையை படத்தில் காணலாம்.

இலங்கையின் சாரணர் தலைமையகம் சர்வதேச சாரணர் சுற்றாடல் வேலைத்திட்டத்தின் மீது அவதானம் செலுத்தி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை குருணாகலை மலியதேவ மகா வித்தியாலயத்தின் மாணவ சாரணர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. மலியதேவ சாரணர்கள் பதினான்கு பேரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்ச்சித் திட்டம் எதிர்வரும் மூன்றாண்டுகளில் அமுலாக்கப்படும் என்று மாணவ சாரணர் பேராசிரியர் டொக்டர் எம்.ஏ.டபிள்யூ. ஏ.ரியாவ குறிப்பிடுகின்றார்.



இலங்கையில் மாணவ சாரணர்கள் பலதரப்பட்ட செயற்பாடுகளை ஏற்பாடு செய்தாலும் இவ்வாறான பெரும் நிகழ்ச்சித் திட்டத்தினை மூன்றாண்டுகளில் செய்யப் பணிக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.



பத்தாயிரம் கும்புக் மரங்கள் நடுகை செய்யும் ஆரம்ப நிகழ்ச்சித் திட்டம் பிரதான ஆணையாளர் பேராசிரியர் மெல் டி சில்வா தலைமையில் ஆரம்பிக்கப் பட்டது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A படத்தை அவதானித்து, B படத்திலுள்ள ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக










குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து சரியான சொல்லை அமையுங்கள்


allb ______


aoct ______


tibe ______


ance ______


aobt ______


kucd ______

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 171

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | 4 |
| 5 | | | | | |
| | | | 6 | | |
| | 7 | 8 | | | 9 |
| | | 10 | | | |
| | | 11 | | | |

### மேலிருந்து கீழ்

01. அடுப்பு ஊதப் பயன்படும்.
02. வீடு.
03. சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாள்.
04. ஒரு வகைத் தானியம்.
08. வாசகன் - எதிர்ப்பாற்சொல்.
09. (பாம்பாட்டியின்) ஊதுகுழல்.


### இடமிருந்து வலம்


01. புனல் வடிவப் பூவும் முட்கள் நிறைந்த உருண்டை வடிவக் காயும் கொண்ட ஒரு வகைச் செடி.
05. படை.
06. துள்ளுகிற மாடு ......... சுமக்கும்.
07. குரங்கினத்தைச் சேர்ந்த - பெரிய கண்களையுடைய சிறிய விலங்கினம். (குழம்பியுள்ளது)
10. கூட்டல் அடையாளம்.
11. 'திறமைசாலி' என்றும் அர்த்தப்படுத்தலாம்.


### குறுக்கெழுத்துப் போட்டி இல.170 விடைகள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 நி | 2 க | ழ் | ச் | 3 சி | |
| 4 வா | ளை | | | லை | 5 ம |
| ர | | 6 கொ | டை | | யி |
| ண | | ழு | | | ல் |
| ம் | | ந் | | ரி | |
| | 7 ப | து | க் | 8 க | ல் |

## எத்தனை உள்ளன? ______










## அடுத்து வர வேண்டியதை இனங்கண்டு நிறந்தீட்டுக





## அறிவுக்கு விருந்து (30.12.2015) விடைகள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



தலவாக்கலையைச் சேர்ந்த சுந்தரராஜ்-தனலெட்சுமி தம்பதியரின் செல்வப் புதல்வன் சபிஷன், தனது பதினைந்தாவது பிறந்தநாளை 15.01.2016 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

# எதிர்மறை எண்ணங்கள்



கல்வி மற்றும் நடைமுறை வாழ்க்கையில் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்துவதில் இந்த எதிர்மறை எண்ணங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. எதிர்மறை எண்ணங்கள், ஒரு மனிதனின் மன உறுதியை சீர்குலைத்தும் விடுகின்றன. நம்பிக்கை இன்மை,

எதிர்மறை எண்ணங்கள் விளங்குகின்றன.

எதிலுமே நம்பிக்கை இன்றி ஒரு விடயம் தொடர்பான நடைமுறைக்கு சாத்தியமற்ற எண்ணங்களை எதிர்மறையாக கற்பனை செய்து அச்சம் கொள்வதே இக்குண இயல்புமாகின்றது.

ஆரம்பிக்கப்படும் அல்லது எதிர்கொள்ளப்படும்

பிரச்சினைகளை நம்பிக்கையுடன் எதிர்கொள்வதற்கு இந்த எதிர்மறை எண்ணங்கள் பெரும் தடையாகின்றன.

ஆரம்ப முயற்சிகள், முன்னேற்



விடயங்களை அல்லது

றங்கள் மற்றும் சீரிய வழியிலான நல்வழி சிந்தனைகளையும் இந்த எதிர்மறை எண்ணங்கள் முளையிலேயே கிள்ளி எறிந்துவிடுகின்றன.

இதனால், இத்தகைய எதிர்மறை எண்ணங்களைத் தவிர்த்து மன ஆரோக்கியத்துடன் நல்லதை நினைப்பதே ஆரோக்கியமான விடயமாகும்.


அச்ச உணர்வு, சோர்வு, மன அழுத்தங்களின் மூலகாரணியாக இந்த

# ஒட்சிசன் தோன்றியது எப்போது...? முடிவின்றித் தொடரும் சர்ச்சைகள்

தாவரங்கள் முதல் உயிரினங்கள் வரை அனைத்திற்கும் வளிமண்டலத்தில் உள்ள ஒட்சிசன் தான் உயிர் வாழ்வதற்கு முக்கிய காரணமாகின்றது. இந்த ஒட்சிசன் எப்போது தோன்றியது...? என்பது குறித்து விஞ்ஞானிகள் ஆய்வுகளை செய்தனர்.



அந்த ஆய்வுகளின்படி, சயோனோ பெக்டீரியா எனப்படும் கடலில் உள்ள ஒருவகை பச்சைப் பாசி மூலம் கடந்த 2.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஒட்சிசன் உருவாகியதாக கருதப்பட்டு வந்தது. ஆனால், தற்போதைய புதிய ஆராய்ச்சி ஒன்றின்மூலம் மூன்று பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே ஒட்சிசனை சுவாசித்து உயிரினங்கள் வாழ்ந்துள்ளதாகவும் தென்ஆபிரிக்காவில் இருந்து சுமார் 2.95 பில்லியன் வயதான பாறைகளை கண்டுபிடித்து ஆராய்ந்தபோதே இத்தகவல்கள் தெரியவந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. இது உலகில் ஒட்சிசன் உருவாக்கம் தொடர்பான ஆய்வுகளில் புதிய சர்ச்சைகளையும் புதிய திருப்பங்களையும் ஆய்வாளர்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.




| Other Gases | Percentage by Volume |
|---|---|
| Argon | 0.93 |
| Carbon dioxide | 0.036 |
| Neon | 0.0018 |
| Helium | 0.00052 |
| Methane | 0.00015 |
| Krypton | 0.00011 |
| Hydrogen | 0.00005 |




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு









எஸ்.சபிஷன்,
தலவாக்கலை த.ம.வித்.,
தலவாக்கலை.





எச்.எப்.ஹனானா,
அல்-ஹிக்மா ம.வித்.,
நாச்சியாதீவு.



பி.திருசனா,
தர்மபுரம், கிளிநொச்சி.



ஏ.பாத்திமா ரொஸ்னி,
சது/முஸ்லிம் மத்திய ம.வித்.,
சம்மாந்துறை.



து.அஸ்விதன்,
விபுலானந்தாக் கல்.,
பண்டாரிக்குளம்.





ஜெ.அருலாஷ்,
விபுலானந்தாக் கல்., வவுனியா.



ச.நந்தினி,
கம்மடுவ த.ம.வித்., ஒப்பல்கல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



**பெயர்:** ஆர்.சதுர்ஷிகா.
**புள்ளிகள்:** 155.
**பாடசாலை:** மே/கொ/ வுல்வெண்டால் ம.ம.வித்தி.,
**பெற்றோர்:** எஸ்.ரமேஸ் - ஆர்.ஜெயா.



**பெயர்:** எஃப். அம்னா.
**புள்ளிகள்:** 156.
**பாடசாலை:** மே/கொ/ வுல்வெண்டால் ம.ம.வித்தி.,
**பெற்றோர்:** எம்.அன்பஷா- எச்.பசீரா.

## பு/மணல்குன்று முஸ்லிம் மகா வித்தியாலயம்



**பெயர்:** ஏ.அஸ்ஹர்.
**புள்ளிகள்:** 191.
**பெற்றோர்:** எம்.நிலாம்டீன்- உம்மு சவ்தா.



**பெயர்:** என்.அம்னா.
**புள்ளிகள்:** 175.
**பெற்றோர்:** ஜீ.நவ்ஃபர்- ஓ.ஜவாஹிரா.



**பெயர்:** சஹ்ரத் இமாஸா.
**புள்ளிகள்:** 170.
**பெற்றோர்:** எம்.இன்ஷாம்- என்.ஷானாஸ்.



**பெயர்:** எஸ்.விதுர்ஷிகா.
**புள்ளிகள்:** 155.
**பெற்றோர்:** எஸ்.சரத் பாபு- எம்.பிரவீணா.



**பெயர்:** எம்.நஜாத்.
**புள்ளிகள்:** 162.
**பாடசாலை:** காத்தான்குடி மத்திய கல்லூரி, காத்தான்குடி
**பெற்றோர்:** எம்.சமீம்- சித்தி நௌபரா.


## கொ/கைரியா முஸ்லிம் பெண்கள் கல்லூரி



**பெயர்:** நூஸ்ரா நஸார்.
**புள்ளிகள்:** 175.



**பெயர்:** சாரா ஷிபர்.
**புள்ளிகள்:** 162.



**பெயர்:** சஸ்னா நஜ்முடீன்.
**புள்ளிகள்:** 158.



**பெயர்:** ஜஸ்மின் இஃப்திகார்.
**புள்ளிகள்:** 146.



**பெயர்:** ஃபரா ஃபரீட்.
**புள்ளிகள்:** 138.


உங்கள் அபிமான

தமிழ் Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs.10/=

தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது

wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானொலி ஒலிபரப்புக் கோபுரத்தின் சிறப்பு






எண்ணற்ற பத்திரிகைகள் வெளிவந்துகொண்டே இருக்கின்றன. ஆனால், வானொலி ஒலிபரப்புக்கள் மட்டும் அவ்வாறு அறிமுகமாவதில்லை. வரையறுக்கப்பட்ட அளவிலேயே வானொலி நிலையங்கள் உள்ளன. இதற்கான காரணம் என்ன? என்ற கேள்வி எழலாம். அதாவது வானொலி ஒலிபரப்புக்கள் என்பது வானலை வழியே ஒலிபரப்புக் கோபுரத்தினூடே ஒலி அலைகளை பரப்பி ஒலிபரப்புவதாகும். இவ்வாறான ஒலிபரப்பை விரும்பியவாறு எல்லோரும் மேற்கொள்ள முடியாது. ஒலிபரப்புக் கோபுரமானது, அரச நிர்வாகத்தினால் கையாளப்படுவதாகும். எனவே, அங்கீகரிக்கப்பட்ட ஒலிபரப்புக்கள் மாத்திரமே மேற்படி ஒலிபரப்புக் கோபுரத்தினூடாக ஒலிபரப்பை மேற்கொள்ள முடியும். இதற்கென அவ்வவ் ஒலிபரப்புக்களுக்கென அலைவரிசைகள் (Frequency) வழங்கப்படுவதுண்டு.

இந்த அலைவரிசையையொட்டியே அவ்வவ் ஒலிபரப்புக்களுக்கென அலைவரிசை இலக்கங்கள் வழங்கப்படுகின்றன. இந்த அலைவரிசைகளே வானொலி நிலையங்கள் 'மீற்றர்' என்று அடையாளப்படுத்துகின்றன.

மேற்படி மீற்றர் அலைவரிசையே வானொலி நிலையத்தின் வானலை முகவரி என குறிப்பிடலாம். முன்குறிப்பிட்ட வானொலி ஒலிபரப்புக் கோபுரங்கள் பிரதான ஒலிபரப்பு மையத்தில் மாத்திரமன்றி தூரப்பிரதேசங்களிலும் உப ஒலிபரப்புக் கோபுரங்களாகவும் நிறுவப்பட்டிருக்கும். இதற்கமைய, பிரதான ஒலிபரப்பு கோபுரத்திலிருந்து வெளிக்கிளம்புகின்ற ஒலிபரப்பானது நேரே உப ஒலிபரப்புக் கோபுரத்தைத் தொட்டு அதிலிருந்து அதனை அண்டிய பிரதேசங்களுக்கு ஒலிபரப்பை மேற்கொள்கின்றது.

இவ்வாறு ஒலிபரப்பை மேற்கொள்வதற்கென கோபுரத்தில் விசேட தொழிநுட்பக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கும். எனவே, அங்கீகாரம் பெற்ற ஒலிபரப்புக்களின் ஒலி அலைகள் மாத்திரமே இதனூடாக ஒலியை பரப்பக்கூடியவாறு நெறிப்படுத்தப்பட்டிருக்கும். இத்தகைய ஒலிபரப்புக் கோபுரங்கள் நாடு பூராகவும் எல்லா பிரதேசங்களையும் இணைக்கும் வகையில் இருந்தால்தான் குறித்த வானொலி நிலையமானது, நாடு பூராகவும் ஒலிபரப்பாகின்றது என குறிப்பிடப்படுகின்றது. இதனைத்தான் Coverage என்று குறிப்பிடுகின்றனர். அவ்வாறு அனைத்துப் பகுதிகளையும் தொடும் வகையில் ஒலிபரப்புக் கோபுரங்கள் இல்லாவிட்டால் அந்த



வானொலி ஒலிபர்ப்பானது, வரையறுக்கப்பட்ட பிரதேசங்களுக்கான ஒலிபரப்பாகவே அறிவிக்கப்படும். இவ்வாறான வரையறுக்கப்பட்ட ஒலிபரப்பானது, நகர மட்டத்திலான அல்லது பிராந்திய மட்டத்திலான ஒலிபரப்பாகவே கருதப்படும்.

பொதுவாக, புதிதாக ஆரம்பிக்கப்படும் வானொலி நிலையங்கள் இவ்வாறு வரையறுக்கப்பட்ட வானொலி நிலையங்களாகவே ஆரம்பிக்கப்படுவதுண்டு. குறிப்பிட்ட சில இடங்களில் மாத்திரமே இதன் ஒலிபரப்பைக் கேட்கக் கூடியதாக இருக்கும். நாளடைவில் இவற்றின் வளர்ச்சியின் அடையாளமாக நாடளாவிய ஒலிபரப்பாக வியாபிப்பதுண்டு. இவ்வாறு நாடளாவிய ஒலிபரப்பாக இருக்கும் வானொலிகளுக்கே அதிகப்படியான விளம்பரங்களும் கிடைக்கப்பெறுவதுண்டு. தமது விளம்பரத்தை ஒரு சிலர் மாத்திரம் கேட்பதைவிட அனைத்து மக்களும் செவிமடுக்கக்கூடியதாக இருப்பதையே எந்தவொரு விளம்பரதாரரும் விரும்புவர்.




எனவே, நாடளாவிய ஒலிபரப்பு இருக்கும்வரையில் இவ்வாறான விளம்பரங்கள் கிடைக்கப்பெறுவதும் சாத்தியமாகவே இருக்கும். இதனால்தான் வானொலி நிலையங்கள் விளம்பரங்களுக்கு முக்கியத்துவத்தை வழங்குகின்றன.

அதன் ஓர் ஊடறுப்பாகத்தான் இன்று செய்திகளில்கூட விளம்பரங்கள் புகுத்தப்பட்டுள்ளன.

(தொடரும்)

**-ரிஷபன்**


## வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

* Practical English Learning Software DVD



* 4000 English Letter Writing Software



* 8 GB Pen Drive



பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

* 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்.....

* ஆங்கில கற்கும் மென்பொருள் DVD
* 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்
* 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்

*30.12.2015 'தூவானம்' கேள்விக்கான விடை:*
நியூஸிலாந்து
Pen Drive வெற்றியாளர்:
ப.கௌதமன்,
மல்லிகை,காரைநகர்,
யாழ்ப்பாணம்.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை

Write Message
F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்

அனுப்பவேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(13.01.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

**இவ்வார கூப்பன்:**
13.01.2016
விடை: ....................................
பெயர்: ....................................
முகவரி: ....................................
தொ.பே.இல:....................................
பாடசாலை:....................................
தரம்: ....................................
....................................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுணர்வை உணர்த்தும் பொங்கல் தினம்




உலக தமிழர்களாலும் உழவர் பெருமக்களாலும் விமர்சையாக கொண்டாடப்படும் பண்டிகைதான் பொங்கல் பண்டிகை ஆகும். ஒவ்வொரு வருடமும் தை முதலாம் நாளன்று (ஆங்கில நாட்காட்டியின்படி இம்முறை ஜனவரி 15) இத்தினம் கொண்டாடப்படுகின்றது. தமிழர்கள் வாழும் தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, லண்டன், ஐக்கிய அமெரிக்கா போன்ற அனைத்து நாடுகளிலும் பொங்கல் திருநாள் விமர்சையாக கொண்டாடப்படுகின்றது.

உழவர்களின் விளைச்சலுக்கேற்ற வெப்பநிலை, மழை போன்ற சூழலைத் தருபவர் சூரிய பகவான் ஆவார். ஆதலால், உழவர் பெருமக்கள் தமது உழைப்பிற்கு உதவிய சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக தாங்கள் விளைவித்த அனைத்துப் பொருட்களையும்







கொண்டு இப்பொங்கல் பண்டிகையை மகிழ்வுடன் கொண்டாடுகின்றனர். உழவர் பெருமக்கள் மட்டும் கொண்டாடிய இத்திருநாளை காலப்போக்கில் உழவர்களுக்கு சார்பாக சூரியனுக்கு நன்றி செலுத்தும் வகையில் சாதாரண மக்களும் இனிதே கொண்டாடுகின்றனர்.

பொங்கல் தினத்தன்று மக்கள் அதிகாலையில் எழுந்து நீராடி புத்தாடை அணிந்து வாசலிலே மாவிலை தோரணத்தாலும் கரும்பினாலும் வீட்டை அலங்கரிப்பார்கள். சூரியனை நோக்கி தலைவாழையிலையில் வெள்ளைப் பச்சையரிசியினை வைத்து அதன்மேல் நிறைகுடம் வைத்து விளக்கேற்றி கதிரவனை வணங்குவார்கள்.

சூரியன் உதிக்கும் திசை நோக்கி வீட்டு முற்றத்தில் கோலமிட்டு அதன்மேல் புது அடுப்பினை அமைத்து, புதிய மஞ்சளினை காப்பாகக் கட்டிய புதுப்பானையில் பாலினைப் பொங்குவர். பால் பொங்கி வரும்போது வீட்டில் உள்ள அனைவரும் கூடி நின்று "பொங்கலோ பொங்கல்" என கூறி அரிசியை கைகளால் அள்ளிப் பானையில் இடுவார்கள். சிறுவர்கள் அந்நேரத்தில் பட்டாசுகளைக் கொளுத்தி மகிழ்வார்கள்.

இனிதே பொங்கல் முடிந்தவுடன் குடும்பத் தலைவி பொங்கலினை வாழையிலையில் பரிமாற குடும்ப தலைவனோ அப்பொங்கலை கிழக்கு நோக்கி சூரியனுக்கு முதலில் படைப்பார். பின்னர் இல்லத்தின் பூஜையறையில் பூஜை செய்வர். தொடர்ந்து குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் குடும்பத் தலைவரின் கைகளால் பொங்கல் பரிமாறப்பட்டு உண்டு மகிழ்வார்கள். இவ்வாறே, அயலவர்களுக்கும் பொங்கல் பரிமாறி, கோவில்களுக்கு சென்று இறை வழிபாட்டையும் மேற்கொள்வார்கள்.

இன்றைய நவநாகரிக உலகில் தமிழர்கள் தங்கள் வயிற்றுப் பசியைப் போக்கும் உழவர்களுக்காகவும் சூரியனுக்காகவும் நன்றி கூறி இவ்விழாவைக் கொண்டாடுவது உலக வாழ் மக்களுக்கு நல்லதோர் முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.

பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல் நாளாகவும் கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் உழவர்கள் தமது விவசாயத்திற்கு உதவியாக இருந்த காளைகளுக்கு நன்றி கூறுகின்றனர். அவற்றை நீராடச் செய்து பல வர்ணங்களில் அழகுபடுத்தி அவற்றின் இருப்பிடமான தொழுவத்தை சுத்தப்படுத்தி அவற்றிற்குப் பொங்கல் கொடுத்து மாட்டுப் பொங்கலை சிறப்பாக கொண்டாடுகின்றனர்.



நன்றி மறவாத இப்பொங்கல் பண்டிகையை இனிதே கொண்டாடும் அனைவருக்கும் இனிய பொங்கல் நல் வாழ்த்துக்கள்

பொங்கலோ பொங்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவவெளியீட்டுப் பகுதி யாழ்ப்பாண பொது நூலகம்



## இவ்வார கார்ட்டூன் படம்






## பல் துலக்க உதவும் குச்சிகள்

இன்றைய காலத்தில் பல் துலக்குவதற்கு பற்பசைகளும் பற்தூரிகைகளுமே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், முற்காலத்தில் சில மரங்களிலிருந்து பெறப்பட்ட குச்சிகளும் வேர்களுமே பல் துலக்கப்



பயன்பட்டன. இன்றும்கூட உலகின் பல பகுதிகளில் வாழும் மக்கள் பல் துலக்குவதற்கு இத்தகைய குச்சிகளையே பயன்படுத்துகின்றனர்.

எருக்கு, நாயுருவி, கருங்காலி, புங்கு, சம்பகம், ஆல், மருது, புரசு, மல்லி, நாவல், மா, அசோகம், அத்தி, வேம்பு, அரசு, கருவேலம், மாதுளை, வாகை,



வேங்கை, இலுப்பை, இலந்தை போன்றவை பல் துலக்கப் பயன்படும் சில மரங்களுக்கான உதாரணங்களாகும். இத்தகைய மரக்குச்சிகளைக் கொண்டு பல் துலக்குவதன்மூலம் ஈறுகளையும் பற்களையும் பாதுகாக்கலாம்.




## சீறிப் பாயும் எரிமலை



எரிமலைகளின் வெடிப்புகளுக்கமைய, அவற்றை 26 வகைகளாகப் பிரித்து நோக்குகின்றனர். சீறும் விதம், வெளிவிடும் வாயுக்கள், எரிமலைக் குழம்பு, வெடித்துச் சிதறும் பாறைகள் ஆகியவற்றை வைத்தே விஞ்ஞானிகள் எரிமலைகளை வகைப்படுத்தியுள்ளனர். சில எரிமலைகள் திடீரென்று வெடிக்கும். எனினும், அவை ஒரே நேரத்தில் நிறைய தீக்குழம்புகளை உமிழாது. இன்னும் சில எரிமலைகள் வெடித்தால் சுருள் சுருளாகப் புகை எழுப்பும். சில எரிமலைகள் சீறும்போது அவ்வளவாக வாயுக்களை வெளியேற்றாது. இவற்றிலிருந்து எரிமலைக் குழம்புகள் கோடு போன்று வெளியேறுவதைக் காணலாம். மேலும் சில எரிமலைகள் ஒரு முறை வெடிக்கும்போதே, எரிமலைக் குழம்புகள், பாறைத் துகள்கள், சாம்பல், வாயுக்கள் என எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் வெளியேற்றும். இவ்வகை எரிமலைகளிலிருந்து வெளியேறும் குழம்புகள் மணிக்கு 160 கிலோ மீற்றர் வேகத்தில் தரையை நோக்கி வரும்.





இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, ஜனவரி 13 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 13, 2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org